விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 26 திங்கட்கிழமை (11.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 235

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ





யாழ்.மாநகர சபையினால் மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டத்தில் நிறுவப்பட்ட தமிழ் மன்னர்கள் மூவரின் சிலைகள் நேற்றுப் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.
இந் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். இந் நிகழ்விற்கு விருந்தினர்கள் வருகை தருவதையும் அமைச்சர் உள்ளிட்ட விருந்தினர்களினால் மன்னர்களின் சிலைகள் திறந்து வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : உ.சாளின்)

## ஈழத்தமிழ் மன்னர்கள் மூவரின் சிலைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வீரம் செறிந்த முப்பெரும் ஈழத்து தமிழ் மன்னர்களின் உருவச்சிலைகள் நேற்று பிற்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டப்பகுதியில் யாழ். மாநகர சபையினால் நிறுவப்பட்டுள்ள எல்லாளன், பண்டாரவன்னியன், பரராஜசேகரன் ஆகிய முப்பெரும் மன்னர்களது உருவச் சிலைகளே திறந்து வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மன்னர்களின் உருவச் சிலைகளின்னை திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியா பொ.பாலசுந்தரம்பிள்ளை, கௌரவ விருந்தின 19 ஆம் பக்கம் பார்க்க....

# ஆணைக்குழு மீது நம்பிக்கை இல்லை

## நேரடியாக குற்றஞ்சாட்டினார் மன்னார் ஆயர்

(கொழும்பு) காணாமற்போனோர் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு மீது நம்பிக்கை இல்லை என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார். ஆயினும், காணாமற்போனோர் தொடர்பிலான விடயங்கள் பற்றிய தமது ஆதங்கத்தை தெரிவிப்பதற்காக சாட்சியம் வழங்குவதாக அவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் குறிப்பிட்டுள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க....



## மோட்டார் குண்டுகள் அச்சுவேலியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் வாதாரவத்தைப் பகுதியிலுள்ள வீடொன்றின் மலசல கூடக் குழிக்குள் இருந்து 81 மில்லிமற்றர் மோட்டார் குண்டுகள் நான்கு நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து அச்சுவேலிப் பொலிஸார்மேலும்தெரி 19 ஆம் பக்கம் பார்க்க....

## பச்சிளம் குழந்தையை நிலத்தில் அடித்த தந்தை


(கரணவாய்)

மதுபோதையிலிருந்த தந்தையினால் தூக்கி நிலத்தில் பலமாக அடிக்கப்பட்ட 9 மாத ஆண் குழந்தையொன்று யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் யாழ்.நெல்லியடி 19 ஆம் பக்கம் பார்க்க....

# பிரபாகரன் போன்ற தலைவர் சர்வதேச புலிகளிடம் இல்லை

## கேணல் ஹரிகரன் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச புலிகள் மத்தியில் புத்துயிர் அளிக்க கூடிய பிரபாகரன் போன்ற தலைவர் எவரும் இல்லை என இந்திய முன்னாள் புலனாய்வாளர் கேணல் ஹரிகரன் தெரிவித்தார்.

தமிழர்களுடன் அர்த்தபூர்வமான நல்லிணக்கத்திற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்காதது மனித உரிமை மீறல்கள் யுத்தக்குற்றங்கள் குறித்த வெளிப்படையான விசாரணைகளை முன்னெடுக்காததுமே இலங்கை அரசாங்கத்தின 20 ஆம் பக்கம் பார்க்க....

## நிதியளிப்போர் பட்டியலில் மூவரின் பெயர்கள் நீக்கம்!

(கொழும்பு)

தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு நிதியளிப்போர் என்று அரசாங்கம் வெளியிட்ட பட்டியலில் இருந்து மூவரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு நிதியளிப்போர் என்று புலம்பெயர் தமிழர்களை உள்ளடக்கிய 424 பேரின் பட்டியல் ஒன்றை அரசாங்கம் கடந்த மார்ச் 20 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், இப்பட்டியலில் இருந்து துரை எனப்படும் கருணாநிதி துரைரத்தினம், சுதர்சன் கைலாயநாதன் மற்றும் தனுஸ்கோடி பிறேமினி ஆகியோரின் 19 ஆம் பக்கம் பார்க்க....

# மகிந்த குற்றச்சாட்டு சம்பந்தர் மறுப்பு !

(கொழும்பு)

இலங்கையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாமல் இருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளதை கூட்டமைப்பு மறுத்துள்ளது.

அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளை அரசே முறித்துக் கொண்டது என்றும், கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற அரசு எந்த நடவடிக்கையும் 19 ஆம் பக்கம் பார்க்க....

# தமிழர்கள் என்ற அடையாளத்தை விட்டுக் கொடுக்க முடியாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

நாம் தமிழர்கள் என்ற இனத்துவ அடையாளத்தை விட்டுக்கொடுத்து விட முடியாது. நாம் இலங்கையர்கள் என்ற அடையாளத்தையோ அல்லது இலங்கையர் என்பதற்காக நாம் தமிழர்கள் என்ற அடையாளத்தையோ இழந்து விடப் போவதில்லை என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தமிழ் மன்னர்கள் மூவரது உருவச்சிலைகள் திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழ் பேசும் மக்களின் பண்டைய வரலாற்றில் முடியாண்ட மன்னர்களில் மூவருக்கு எமது மண்ணில் சிலையெடுக்கும் இந்த நாள் ஒரு பொன்னான நாள். அழிவுகளில் இருந்தும், அவலங்களில் இருந்தும் எமது மக்களை வரலாறு விடுதலை செய்திருக்கின்றது.

இதுபோல் எமது மண்ணில் எமது மக்கள் சுதந் 19 ஆம் பக்கம் பார்க்க....



ஆயிரக்கணக்கான அடியவர்களின் மத்தியில் நேற்று மஞ்சத்தில் வலம் வந்தார் நல்லைக்கந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சாகசம் காட்டிய இளைஞன் காயம்

(கரணவாய்)

ஆலயத் திருவிழா இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளை வீதியில் மோட்டார் சைக்கிளில் சாகசம் காட்டிய இளைஞர் ஒருவர் பிறிதொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் யாழ்.அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் தீர்த்தத் திருவிழாவின் போது இடம்பெற்றுள்ளது.

தீர்த்தமாடுவதற்கென சுவாமி கடற்கரைக்கு சென்றுவிட்டு ஆலயம் நோக்கி வந்துகொண்டிருந்த வேளை குறித்த இளைஞர் தனது மோட்டார் சைக்கிளில் அவ்வீதியூடாக பலமுறை மிதமிஞ்சிய வேகத்தில் பயணித்த அதேவேளை மோட்டார் சைக்கிள் சாகசத்திலும் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் பிறிதொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி குறித்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை விபத்துக்குள்ளான இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகின.

இந்த விபத்தில் பருத்தித்துறையை சேர்ந்த விமலதாஸ் முகுந்தன் (வயது-24) என்ற இளைஞரே விபத்தில் சிக்கி படுகாயமடைந்துள்ளார். (எ-6-60)

# கன்னியா வெந்நீர் ஊற்றில் சிங்களக் குடியேற்றம்?

(திருகோணமலை)

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் புதிய வீதி ஒன்று அமைக்கப்படுவது, அந்தப் பகுதியில் பாரிய சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சியாக இருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கும், அனுராதபுரத்துக்கும் இடையிலான வீதியில் இருந்து பிரிந்து செல்லும் வீதி வழியாகவே கன்னியா வெந்நீர் ஊற்றுக்கான போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

இந்த வீதிக்குப் பதிலாக தற்போது அதே வீதியில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் சந்தபுர வீதி என புதிய வீதி ஒன்றை படைத்தரப்பும், தொல்பொருள் ஆய்வுத் திணைக்களமும் இணைந்து அமைத்து வருகிறது.

திருகோணமலை மாவட்ட இந்துக்கள் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியிலேயே இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்கான அந்தியேட்டிக் கிரியைகளை செய்து வருகின்றனர்.

கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் தற்போது இந்து மத அடையாளங்கள் அருகி, பௌத்த வழிபாட்டுக்குரிய அடையாளங்களே முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

அத்துடன் நீண்டகாலமாக உள்ளூராட்சி மன்றத்தின் பராமரிப்பிலிருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசம் 2010ஆம் ஆண்டு தொல்பொருள் ஆய்வு மற்றும் வன பரிபாலனம் என்ற காரணங்களைக் கூறி சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன்.

புதிதாக அமைக்கப்படும் வீதியில் சுமார் 1000 ஏக்கர் வரையான அரச காணிகள் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-6)

# ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் பஸ் தரிப்புக் கட்டத்தில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொட்டியடி விசுவமடுவைச் சேர்ந்த எஸ். ஜோர்ஜ் (வயது-40) என்பவரே சடலமாக காணப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பஸ் தரிப்பிட கட்டத்திற்குள் சடலம் காணப்படுவது குறித்து அப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.


அங்குவந்த பொலிஸார் சடலத்தை மீட்டு கிளிநொச்சி மருத்துவனையில் ஒப்படைத்துள்ளனர். (எ-6)

# பிள்ளையார் கோவில் புனரமைப்பை புத்தருக்காக தடுத்த படையினர்

## ஓமந்தையில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பிள்ளையார் கோயிலில் புத்தருக்கு கோயில் கட்டவேண்டும் என்றும் இதனால் புனரமைப்பு பணிகளை கைவிடுமாறு இராணுவத்தினர் நிர்வாகத்தினரைத் தடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.



எதிர்வரும் 16 ஆம் திகதி கும்பாபிஷேகம் செய்யும் பொருட்டு ஓமந்தை பிள்ளையார் கோயில் புனரமைக்கப்பட்டு வருகிறது. தற்போது வசந்த மண்டபம், தீர்த்தக் கேணி என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆலயத்துக்கு சென்ற இராணுவத்தினர், ஆலயக் காணி தங்களுக்கு உரியது என்றும் அதில் தாம் புத்தகோயில் கட்டப்போகிறோம், நீங்கள் புனரமைப்பு பணிகளைக் கைவிடுங்கள் என்றும் மிரட்டியுள்ளனர்.

எனினும் ஓமந்தைப் பிள்ளையார் கோயில் 100 வருடங்கள் பழமைவாய்ந்தது என்று கூறிய ஆலய நிர்வாகத்தினர், இராணுவத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-6)

# ஊடகங்களை கட்டுப்படுத்த அமைச்சர் விமல் ஆலோசனை



(கொழும்பு)

ஊடகவியலாளர்களை கட்டுப்படுத்த விமல வீரவன்ச யோசனைத் திட்டமொன்றை முன் வைத்துள்ளார்

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகவியலாளர்களை கட்டுப்படுத்த அமைச்சர் விமல் வீரவன்ச யோசனைத் திட்டமொன்றை முன் வைத்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு ஒழுக்க கோவை ஒன்றை முன்வைக்க உள்ளதாக அமைச்சர் அறிவித்துள்ளார். ஊடகவியலாளர்களையும் ஊடகத்துறையையும் தரமானதாக்கும் நோக்கில் இவ்வாறு ஒழுக்கக் கோவை ஒன்றை முன்வைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவின் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஊடகவியலாளர்களுக்கு ஊடக ஒழுக்கவிதி ஒன்றை அறிமுகம் செய்ய உள்ளதாக ஊடக அமைச்சர் கடந்த ஆண்டு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# புதிய மகசின் சிறையில் பூனைகளின் தொல்லை!

## ஆஸ்துமா வருமென கைதிகள் அச்சம்

(கொழும்பு)

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் பூனைகள் மற்றும் பெரிய இன எலிகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாகவும் அதனால் ஆஸ்துமா போன்ற தொற்றும் மற்றும் தொற்றா நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பூனைகள் உண்ணும் மாமிச உணவின் மீதிகள் சிறைச்சாலை வளாகத்தில் கிடப்பதால் துர்நாற்றம் வீசுவதாகவும் அது தொடர்பாக சிறைச்சாலை நிர்வாகத்திடமும் சிறைச்சாலை மருத்துவரிடமும் பலதடவை முறைப்பாடு செய்தும் இதுவரை எவ்வித பலனுமில்லை என சிறைக்கைதிகள் தெரிவிக்கின்றனர்.

இன்று உலகின் பல்வேறு நாடுகளில் மிருகங்களால் பரவக்கூடிய நோய்கள் அதிகரித்துள்ளன. அந்தவகையில் மேற்கு ஆபிரிக்காவில் எபோலா வைரஸ் மிக வேகமாக பரவிவருவதுடன் அதனால் 800 பேர் பலியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2011 ஆம் ஆண்டு ஐ.நாவின் சிறைச்சாலைகள் நலன் தொடர்பான ஆய்வுக் குழுவினர் இலங்கை சிறைச்சாலைகளை பார்வையிட்டனர்.

அதன்பின்னர் வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவு உட்பட கொழும்பில் ஏனைய சிறைச்சாலைகளில் எலிகள் அதிகமாக காணப்படுவதாகவும் இது சிறைக் கைதிகளின் ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இன்று கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் பூனைகள் மற்றும் எலிகளின் தொல்லைகளால் பல்வேறு நோய்கள் பரவும் சாத்தியங்கள் உள்ளதாகவும் அதனை தடுக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சிறைக்கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-6)

# தனது நாட்டு பிரஜைகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

இலங்கையில் மேற்குலகிற்கு எதிரான உணர்வுகள் தீவிரமடைவதற்கான வாய்ப்புள்ளதால் தனது பிரஜைகளை எச்சரிக்கையாக இருக்குமாறு அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இலங்கையில் உள்ள அமெரிக்க பிரஜைகளுக்கான எச்சரிக்கையொன்றை விடுத்துள்ள அமெரிக்கா, நாட்டில் அதிகரித்து வரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக தனது பிரஜைகளை எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுள்ளது.

அமெரிக்க ஐரோப்பிய இராஜதந்திரிகள் கலந்து கொண்ட காணாமற் போனவர்களின் குடும்பத்தவர்களுடனான சந்திப்பின் போது இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்ன தொடர்ந்தே இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

ஐ.நா மற்றும் மேற்குலகிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள். காணா நிலைவரம் மற்றும் இலங்கையில் சிவில் சமூகத்தினருக்கு எதிராக அதிகரிக்கும் ஆர்ப்பாட்டங்கள் போன்றவை குறித்தும் அமெரிக்கா தனது பிரஜைகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளது. (எ-6)

# தென்னையில் ஏறிய இளைஞன் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான் பிரதேசத்தில் இளைஞன் ஒருவர் தென்னை மரத்திலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

இளநீர் பறிப்பதற்காக தென்னை மரத்தில் ஏறிய இளைஞர் மரத்திலிருந்து விழுந்து பரிதாபகரமான முறையில் மரணமாகியுள்ளார்

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

மரணமான இளைஞர் வாகனேரி குளத்து மடுவைச் சேர்ந்த ஆறுமுகம் கண்ணன் (வயது 20) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-6)

உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் உணவு விடுதிக்கு
- சமையல்காரர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
077 470 1492


பிற்போடப்பட்டுள்ளது

பூலசிட்டி, அச்செழு, நீர்வேலி ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய வளர்ச்சி நிதிக்காக நேற்றைய தினம் நடாத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 10/10/2014 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஆலயத் திருப்பணிச் சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன! நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

**குறிப்பு:** பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாளரைக் கௌரவித்தது அட்லஸ்

இலங்கையின் மிகப்பெரிய காகிதாதிகள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் நிறுவனமான சிலோன் பென்சில் கம்பனி (பிரைவேற்) லிமிடெட் (அட்லஸ்), சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த விற்பனையாளர்களை கௌரவிக்கும் வகையில் பாங்கொக் சென்றுவருவதற்கான சுற்றுலாப் பயணங்களை வழங்கியிருந்தது. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.ஹம்சாவின் பங்குபற்றலுடன் கிரிபத்கொட, க்ளாரியன் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வின்போது இந்த விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. நாடு முழுவதையும் சேர்ந்த சுமார் 35க்கும் அதிகமான விற்பனையாளர்கள் இந்த நிகழ்வின்போது கௌரவிக்கப் பட்டிருந்தனர.

2013 டிசெம்பர் மாதம் அற்லஸ் முன்னெடுத்திருந்த Back to School ஊக்குவிப்புப் பிரசாரத் திட்டத்தின் மூலம் சிறப்பான முறையில் விற்பனையை மேற்கொண்டிருந்த விற்பனையாளர்களை கௌரவிக்கும் வகையில் இந்த சுற்றுலாப பயணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் சிலோன் பென்சில் கம்பனி லிமிடெட் (அட்லஸ்) நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம். ஹம்சா கருத்து தெரிவிக்கையில்,

"எமது விற்பனையாளர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டை நாம் கௌரவப்படுத்துவதோடு, அவர்களின் வியாபாரத்தின் விருத்தியினை பற்றி சிந்தித்து செயற்படுகின்ற கம்பனியாக இந்நாட்டின் கம்பனிகளிடையே நாம் தனித்துவமாக திகழ்கிறோம். எப்போதுமே எங்களுடைய விற்பனையாளர்களின் மீதான உயரிய உறவினை கடந்த வருடத்தில் நடைபெற்ற சிறப்பான திறமைகளை வெளிக்காட்டிய விற்பனையாளர்களின் தெரிவின் மூலம் வெளிக்காட்டியிருந்தோம்" என தெரிவித்தார்.

இலங்கையின் காகிதாதிகள் சந்தையில் அதிகூடிய சந்தை வாய்ப்பை தன்னகத்தே கொண்டுள்ளமைக்கு மேலதிகமாக, அற்லஸ் இலங்கையின் முதலாவது காகிதாதிகள் அபிவிருத்தி மற்றும் ஆய்வுகூடத்தையும் நிறுவியுள்ளது. ஒவ்வொரு வருடமும் தனது உற்பத்தி தொகுதியில் புதிய உற்பத்திகளை உள்ளடக்கி வருகிறது.

இதன் மூலம் நாட்டின் பாடசாலை மாணவர்களுக்கு புத்தாக்க சிந்தனையில் உருவாகிய உற்பத்திகளை சகாய விலையில் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

# கொன்டினென்டல் இன்சூரன்ஸ் மேலும் ரூ.250 மில். முதலீடு

உள்நாட்டு பிரபல வர்த்தக பிரமுகரான ஹரி ஜயவர்தனவின் மூலம கொன்டினென்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்துக்கு மேலதிகமாக 250 மில். ரூபா முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காப்புறுதி துறையின் ஜாம்பவானாக கருதப்பட்ட AIG, இலங்கையிலிருந்து தனது பொது காப்புறுதி செயற்பாடுகளை இடைநிறுத்திக் கொள்வதாக அறிவித்ததை தொடர்ந்தும் கடந்த வாரம் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனம் தனது பொது காப்புறுதி வர்த்தகத்தை வெளிநாட்டு நிறுவனமான ஃபெயார் ஃபக்ஸ் ஏசியா நிறுவ னத் துக்கு விற்பனை செய்ய முன்வந்துளளமை குறித்து அறிவித்திருந்ததை தொடர்ந்து இந்த நகர்வை ஹரி ஜயவர்தன மேற்கொண்டுள்ளார்.

# இலங்கையிலும் மஹா சீமெந்து



இந்திய சீமெந்து உற்பத்தித துறையில் புகழ்பெற்ற வர்த்தக நாமமாகத் திகழும் மஹா சீமெந்து தனது வர்த்தக நடவடிக் கையை இலங்கைக்கும் விஸ்தரித்திருக்கிறது. மஹா சீமெந்தை இலங் கைக்கு அறிமுகம் செய்யும்வைபவம்அண்மையில் கொழும்பு ஹிலடன் ஹோட்டலில்நடைபெற்றது.

இவ்வைபவத்தில நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சாம்பசிவ ராவ், சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் விஜயவர்தன, இலங்கைக்கான சிரேஷ்ட சந்தைப்படுத்தல் முகாமையாளர் டீ. சி. மூர்த்தி உட்பட பல முக்கியஸ்தர்கள் இவைவத்தில்கலந்து கொண்டனர். மஹா சீமெந்தை உற்பத்தி செய்யும் மைஹோம் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துக்கான இலங்கை தரச் சான்றிதழை அதன் பணிப்பாளர்நாயகம்சாம்சிவராமிடம்கையளிக்கும்முக்கிய நிகழ்வு அன்று நடைபெற்றது.

மைஹோம் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனம் ஹைதராபாத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் 23 பில்லியன் இந்திய ரூபாவை மூலதனமாகக் கொண்ட பாரிய நிறுவனமாகும். சீமெந்து, எரிசக்தி, நிர்மாணம், ஆதன விற்ப னைத் துறை, கல்வி, போக்குவரத்து எனப் பல துறை களில் இயங்கும் இந்நிறுவனம் விரைவிலேயே தமிழகத்தில் ஒரு சீமெந்து தொழிலகத்தை நிறுவவுள்ளது. இந்தியா எங்கும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விற்பனை முகவர்களைக் கொண்ட இந்நிறுவனம் பரந்த அடிப்படையில் தனது வர்த்தக நடவடிக்கைகளை இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# செல்வந்தர்களில் 14 ஆயிரம் பேர் இந்தியாவில்

உலகளாவிய ரீதியிலுள்ள செல்வந்தவர்களில் 14,800 பேர் இந்தியாவில் உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியிலுள்ள 25 நகரங்களில்மும்பையில் 2,700 செல்வந்தர்கள் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இதனைவிட ஐக்கிய இராச்சியத்தில் அதிகளவான செல்வந்தவர்கள் இருப்பதாகவும், அந்த எண்ணிக்கை 21,700 எனவும் தெரிவிக கப்பட்டுள்ளது. மேலும் ஜப்பானில 21,000 பேரும் சுவிட்ஸர்லாந்தில 18,300 பேரும், ஹொங்கொங்கில் 15,400 பேரும் ரஷ்யாவில் 11,700 பேரும் பிரேஸிலில் 10,300 பேரும் செல்வந்தர்களாக உள்ளனர்.

புதிய உலக செல்வந்தவர்கள் தொடர்பான அறிக்கையில் 2014 -ம் ஆண்டு வரை உலகளாவிய ரீதி யில் 13 மில்லியன் செல்வந்தவர்கள உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மில்லியன் அமெரிக்க டொலர மற்றும் அதற்கு அதிகமான சொத்து உள்ளவர்கள் செல்வந்தர்களாக கருதப்பட்டு இந்த கணக்கெடுப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

# யூலையில் சுற்றுலாப் பயணிகள் 25 சதவீதத்தால் அதிகரிப்பு

நடப்பு ஆண்டின் யூலை மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் பதிவாகிய எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 25.2 வீத அதிகரிப்பை பதிவு செய்து 133,971 ஆக பதிவாகியிருந்தது.

நடப்பு ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் பதிவாகியிருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 24.7 வீதத்தால் அதிகரித்து 861, 324 ஆக பதிவாகியிருந்தது.

இதில் சீனாவிலிருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 144.2 வீதத்தால் அதிகரித்து 82,815 ஆக பதிவாகியிருந்தது. இதேவேளை ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு பங்குச் சந்தை 3 வருடங்களில் உயர் பெறுமதி

3 வருடங்களில் பதிவாகிய உயர் பெறுமதியை அண்மித்த பெறுமதியை கொழும்பு பங்குச் சந்தை கடந்த திங்கட்கிழமை பதிவு செய்திருந்தது. சுட்டிகள் நேர் பெறுமதியுடன் நிறைவடைந்திருந்தன.

இதில் வங்கி,நிதியியல் மற்றும் காப்புறுதித் துறை என்பது சந்தையின் புரள்வு பெறுமதியில் உயர் பங்களிப்பை வழங்கியிருந்தது (ட்ரேட் ஃபினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பங்குகள் மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகளின் பங்களிப்புடன்) இந்தத் துறை 0.66 வீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. டிரேட் ஃபினான்ஸ்அன்ட்இன்வெஸ்மன்ட்ஸ்பங்கொன்றின் விலை 0.80 ரூபாவால் (2.94%) குறைந்து 28.00 ரூபாவாக பதிவாகியிருந்தது. கொமர்ஷல் வங்கி பங்கொன்றின் விலை 1.10 ரூபாவால் (0.76%) குறைந்து 142.90 ரூபாவாக நிறைவடைந்திருந்தது.

உற்பத்தித்துறை என்பது புரள்வு பெறுமதியில் இரண்டாவதாக உயர் பங்களிப்பை வழங்கியிருந்தது. (செவ்ரொன் லுப்ரிகன்ட்ஸ் பங்களிப்புடன்) இந்த துறையின் சுட்டெண் 0.14 வீதம் அதிகரித்திருந்தது. செவ்ரொன் லுபரிகன்ட்ஸ் பங்கொன்றின் விலை 0.10 ரூபாவால் (0.03%) குறைந்து 310.50 ரூபாவாக பதிவாகியிருந்தது.

பிரவுண் இன்வெஸ்ட்மன்ட்ஸ் மற்றும் எயிட்கன் ஸ்பென்ஸ் ஆகிய பங்குகளும் புரள்வு பெறுமதியில் உயர் பங்களிப்பை வழங்கியிருந்தன. பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பங்கொன்றின் விலை 0.20 ரூபாவால் (11.76%) குறைந்து 1.50 ரூபாவாக பதிவாகியிருந்தது.

இதேவேளை எயிட்கன் ஸ்பென்ஸ் பங்கொன்றின் விலை மாற்றமின்றி 108.00 ரூபாவாக பதிவாகியிருந்தது




# கடந்த வாரம் பங்குச்சந்தை

கடந்த வாரம் முழுவதும் தொடர்ச்சியான உயர் பெறுமதிகளை பதிவு செய்திருந்த கொழும்பு பங்குச்சந்தை, செவ்வாய்க்கிழமை சரிவான பெறுமதிகளை பதிவு செய்திருந்தது. யூன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டு பகுதிக்கான நிதியறிக்கைகள் பெருமளவில் வெளியாகியிருந்ததை தொடர்ந்து, குறித்த காலாண்டில் சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்திருந்த நிறுவனங்களின் பங்குகளை கொள்வனவு செய்வதில் முதலீட்டாளர்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதன் காரணமாக எதிர்வரும் வாரத்தில் கொழும்பு பங்குச் சந்தை 7000 புள்ளிகளை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் நிறைவடைந்தபோது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6,918.23 ஆகவும் S&P சிறிலங்கா 20 சுட்டி 3801.87 ஆகவும் பதிவாகி யிருந்தன.

கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ.9,080,794,297 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 57 ஆயிரத்து 451 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 55 ஆயிரத்து 578 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் ஆயிரத்து 873 ஆகவும் பதிவாகியி ருந்தன.

கடந்த திங்கட்கிழமை சுட்டிகள் நேர் பெறுமதியுடன் நிறைவடைந்திருந்தன. இதில் சிலோன் டொபாக்கோ கம்பனி, ஜோன் கீல்ஸ ஹோல்டிங்ஸ் மற்றும் கொமர்ஷல் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் ஆகி யன அதிகளவு பங்களிப்பை வழங்கியிருந்தன. உயர் நிகர பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு ட்ரேட ஃபினான்ஸ்அன்ட்இன்வெஸ்ட்மன்ட்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. இது புரள்வு பெறுமதியில் 67 வீத பங்களிப்பை செலுத்தியிருந்தது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை சந்தை சுட்டிகள் மறை பெறுமதியில் நிறைவடைந்த போதிலும் புரள்வு பெறுமதி 1.5 பில்லியன் ரூபாவை எய்தியிருந்தது. வங்கித் துறை இதில் 51 வீத பங்களிப்பை செலுத்தியிருந்தது.

புதன்கிழமை கொமர்ஷல் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டி ங்ஸ் மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் பங்குகள் மீது விலை உயர்வுகள் பதிவாகியிருந்தமை காரணமாக சந்தை உயர்வடைந்திருந்தது. ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது மொத்த பங்கு கைமாறல்கள் இடம்பெற்றிருந்தன. சென்ரல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் ஃபினான்ஸ் மற்றும் சொஃப்ட்லொஜிக் ஆகிய பங்குகள் மீது சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு பதிவாகியிருந்தது. இதேவேளைஇ வெளிநாட்டவர்கள் தொடர்ந்து பங்கு கொள்வனவில்ஈடுபட்டிருந்தனர்.

அடுத்த நாள் வியாழக்கிழமை அ.ப.வி.சு 6,900 புள்ளிகளை கடந்திருந்தது. இதில் சிலோன் டொபாக்கோ கம்பனி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் கார் சன் கம்பர்பட்ச் ஆகிய நிறுவனங்கள் பங்களிப்பை செலுத்தியிருந்தன. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, செவ்ரொன் லுப்ரிகன்ட்ஸ், ஜனசக்தி இன்சூரன்ஸ் மற்றும் அக்சஸ் என்ஜினியரிங் ஆகிய பங்குகள் மீது மொத்த வியாபாரங்கள பதிவாகியிருந்தன. உயர் நிகர பெறுமதி வாய்ந்த ஈடுபாடு ஒடெல் பங்குகளின் மீது பதிவாகியிருந்தது. சிறியளவிலான முதலீட்டாளர்கள் யூனியன்வங்கி, சென்ரல்இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் ஃபினான்ஸ் மற்றும் டெக்ஸ்ச்சர்ட் ஜேர்சி லங்கா ஆகிய பங்குகள் மீது ஆர்வம் செலுத தியிருந்தனர். வெளிநாட்டு கொள்வனவு மொத்தப்புரள்வு பெறுமதியில் 33 வீத பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

வாரத்தின் இறுதி நாளான வெள்ளிக்கிழமை சந்தை பரந்தளவில் உயர் பெறுமதிகளை பதிவு செய்திருந்தது. புரள்வு பெறுமதி 1.5 மில்லியன் ரூபாவை கடந்திருந்தது.

கடந்த வார கொடுக்கல் வாங் கல நடவடிக்கைகளில் சிஐஎ/வ்எல், /ஹனாஸ்ஃபோல்ஸ், சிலோன்லைதர (வாக்குரிமை), செங்கடகல மற்றும செங்கடகல ஃபினான்ஸ் போன்றன முதல 5 சிறந்த இலாப மீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

பிசி பார்மா, பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட், லங்கா சென்ச்சரி (உரிமை), ஓரியன்ட் காமன்ட்ஸ் மற்றும் பிசிஎச் ஹோல்டிங்ஸ் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.74 | 131.62 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 215.68 | 221.85 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 170.95 | 176.56 |
| சுவிஸ் பிராங் | 140.74 | 145.89 |
| கனேடிய டொலர் | 117.00 | 120.97 |
| அவுஸ்திரேலிய டொலர் | 118.17 | 122.63 |
| சிங்கப்பூர் டொலர் | 102.14 | 105.51 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.44 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளத்தில் விசமிகளால் தீ; எரிபொருள் நிலையம் தப்பியது

(மல்லாவி)

ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள நெடுங்கேணி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்த மான எரிபொருள் நிரப்பு நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை பரவிய காட்டுத் தீயிலிருந்து அனர்த்தமின்றி தப்பியுள்ளது.

மாங்குளத்தில் காய்ந்து போன புற்றரைகளுக்கு இனந்தெரியாத விசமிகளால் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் தீ வைக்கப்பட்டது.

அத்தீயானது பெரும் காட்டுதீயாக பரவி சுமார் 60 ஏக்கருக்கு மேல் எரிந்த நிலையில் ஏ-9 வீதிக்கு அருகில் உள்ள மேற்படி எரிபொருள் நிலைய பிற்பகுதி நோக்கி வேகமாக பரவத் தொடங்கியது. இது தொடர்பாக மாங்குளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தி சம்பவ இடத்திற்கு விரைந்த மாங்குளம் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பெருமளவான பொது மக்கள் உதவியுடன் பவுசர் மூலமும் கிணற்று நீர் மூலமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ஆயினும் பெரும் மரங்களுக்கு பரவிய தீயானது நீண்ட நேரமாக நிலைத்து எரிந்து கொண்டிருந்தது எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

மாங்குளம் பொலிஸார் அண்மையில் பொது மக்களுக்கு காட்டுத்தீ பற்றி விழிப்பாக இருங்கள் என அறிவித்திருந்த நிலையில் இத் தீ அனர்த்தம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (6-15)

# மனநல பாதிப்புக்களால் தற்கொலைக்கு முயற்சி

## இலங்கையில் வருடாந்தம் 80 ஆயிரம் இளையோர்

இளம்பராயத்தினர் எதிர்கொள்ளும் அதிகரித்த மனஅழுத்தம் உள்ளிட்ட மனநலப்பாதிப்புக்கள் காரணமாக இலங்கையில் வருடாந்தம் 80 ஆயிரம் இளையோர் தற்கொலைசெய்து கொள்ள முயற்சிகளை மேற்கொள்வதாக ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எலன் சிப்னேலர் தெரிவித்தார்.

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு இளஞ்சந்ததியினர் எதிர்கொள்ளும் மனநலப்பாதிப்புக்கள் தொடர்பில் அண்மையில் சுகாதாரக்கல்விப்பணியகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இளம்பராயம் என்பது உண்மையிலேயே சவால்கள் நிறைந்த ஒருகாலகட்டமாகும். இக்காலகட்டத்தில் தான் உடல், உள, சமூக ரீதியில் இளஞ்சந்ததியினர் பக்குவத்தையும் வளர்ச்சியையும் அடையவேண்டிய தேவைப்பாடும் காணப்படுகின்றது. அவ்வாறு பார்க்கின்ற போது பாலியல் ரீதியான வன்முறைகள், மதுபாவனை உள்ளிட்ட பிரச்சினைகளையும் அவர்கள் சந்திக்க நேரிடுகின்றது. இலங்கையைப்பொறுத்த மட்டில் 2 இலட்சம் பேர் தீவிர மனநலப்பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளனர்.

மனஅழுத்தம் உள்ளிட்ட மனநல சுகாதாரத்தைப் பாதிக்கும் காரணிகளால் 40 வீதமான மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதாக ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. உலகளாவியரீதியில் 15 தொடக்கம் 24 வயதுக்குட்பட்ட 280 மில்லியன் இளையோர் மனநலப்பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வருடத்தின் கடந்த ஏழுமாதகாலப்பகுதியில் 18 வயதான 14 மில்லியன் இளம்யுவதிகள் கட்டாயத்திருமணத்துக்கு வற்புறுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை 15 வயதான 2 மில்லியன் இளம்யுவதிகள் குழந்தைப்பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவை இளம்பராயத்தினரின் எதிர்காலத்தை சீர்குலைப்பதாகவே அமைகின்றன. இன்றைய சமூகத்தில் நீரிழிவு, இரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களைக்கூட பிறர் மத்தியில் பெருமிதத்துடன் கூறுவோர் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

## காணாமற்போன தேரர் சடலமாக மீட்பு

அஹங்கம, உக்ஹல்வல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இருந்த தேரர் ஒருவர் காணாமற்போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தூக்கிட்ட நிலையில் குறித்த தேரர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

45 வயதான தேரர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் காணாமற்போயிருந்ததாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (6)


# மரண அறிவித்தல்



## திரு.வைரமுத்து அப்புத்துரை

(முன்னாள் உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிளை மேற்பார்வையாளர், களஞ்சிய காப்பாளர்)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வைரமுத்து அப்புத்துரை அவர்கள் 08.08.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.08.2014 புதன்கிழமையன்று அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக காலை 10 மணியளவில் ஊறணி (வல்வை) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெடுங்கண்ணி
வல்வெட்டி
T.P . 0212263981

C-8150

தகவல்
குடும்பத்தினர்


## 200 பேரையும் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை

ஆபிரிக்காவில் வேகமாக பரவி வரும் எபோலா எனப்படும் வைரஸ் நோய் காரணமாக, லிபியாவில் தொழில் புரியும் இலங்கையர் 200 பேரையும் நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (6)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 40 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 350 | 200 |
| தக்காளி | 50 | 70 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 100 | 100 | 120 |
| பூசணி | 25 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 50 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 40 | 60 | 80 |
| பீற்றூட் | 60 | 50 | 70 |
| கறிமிளகாய் | 100 | 150 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 100 | 60 |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 70 | 80 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

# இன்றைய இராசி பலன்

**11.08.2014**

**(ஆடி 26, திங்கட்கிழமை)**

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பிரதமை முன்னிரவு 10.26 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 10.45 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை

வளவன்

**மீனம்:** தொழிலில் உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மேடம்:** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்

**இடபம்:** சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும் புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், தேக நலனில் கவனம் எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பண வரவு திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வெளியூர் பயணங்கள் விருப்பத்தை நிறைவேற்றும்.

**தனுசு:** உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் பெறுவீர்கள், வியாபார விரோதம் விலகும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், முயற்சிகள் கைகூடும்.

**துலாம்:** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள்.


**கன்னி:** இனத்தார் பகை மாறி இன்பம் கூடும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கடன் பாக்கிகள் திடீரென வசூலாகும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வணக்கத்திற்குரிய வித்தியாசாகரம் சி
# அவர்களின் யாழ். விருது-2014 சிறப்பு

## ஆசியுரை வழங்கிய சமயத் தலைவர்கள்


சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்- ஒன்றிய வித்வ சபை உறுப்பினர்


சிவஸ்ரீ சாம்பசிவஜயப்ப தாச சிவாச்சாரியார்- சாஸ்தா பீடாதிபதி


வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள், சின்மயாமிஷன்


பிரம்மஸ்ரீ சிவானந்த சர்மா - கோப்பாய்


சிவஸ்ரீ தியாகராஜக் குருக் கள்- கொழும்பு


சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக் குருக்கள்- சரசாலை.



சிவஸ்ரீ சதாசிவஐயர், ஓய்வு நிலை பதிவாளர் நாயகம்


சிவஸ்ரீ கை. வாமதேவக் குருக்கள்- ஒன்றிய வித்வ சபை உறுப்பினர்


பிரம்ம ஸ்ரீ சுந்தரராஜசர்மா -ஒன்றிய உப செயலாளர்


சிவஸ்ரீ ந. யோகானந்தக் குருக்கள்- சுருவில்


சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்த குருக்கள்- பொன்னாலை


சிவஸ்ரீ பமுத்துக்குமார சாமிக் குருக்கள்- நயினை


சிவஸ்ரீ சு.ஸ்ரீரங்கநாதக் குருக் கள்- வடக்கம்பரை

**2014இல் யாழ் விருது பெறும் வித்யாசாகரம் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள்**



சித்தன்கேணி சிவன் தேவஸ்தான ஸ்தானிக குருவாக விளங்குபவர் சிவஸ்ரீ. சபா.வாசுதேவக் குருக்கள். சித்தன்கேணியைச் சொந்த ஊராகக் கொண்ட குருக்களின் தந்தையார் பிரம்மஸ்ரீ. ஞான.சபாரட்ணசர்மா, தாயார் வடிவாம்பிகை. இவருடைய வழித் தோன்றல்கள் சித்தன்கேணி சிவகாமி சமேதஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் ஸ்தானிக குருவாகத் திகழ்ந்து வருகின்றனர்.

வாசுதேவக்குருக்களின் பேரனார் சிவஸ்ரீ. த.ஞானபண்டிதக்குருக்கள் அவர் இவ் ஆலயத்தில் தனது கிரியைகளை செய்யும் போது சிறு வயதில் இருந்தே வாசுதேவக் குருக்களையும் தனது அரவணைப்பில் ஆலய சேவையில் இணைத்துக் கொண்டார். பின்னர் தமிழ், சமஸ்கிருதம் போன்றவற்றையும் கற்றுக் கொடுத்தார்.

மேலும் வாசுதேவக்குருக்களது சமஸ்கிருதக் கல்வியை மேம்படையச் செய்வதற்காக அவரது ஏழாவது வயதில் குருகுலக் கல்வியை ஆரம்பிப்பதற்காக யாழ்ப்பாணம் சிவானந்த குருகுலத்தில் அவரது தந்தையார் இணைத்தார். இவரின் ஒன்பதாவது வயதில் அந்தணர்களுக்குரிய உபநயனம் என்று சொல்லப்படுகின்ற பூணூல் அணியும் சடங்கினை நல்லூர் வியாகரண சிரோன்மணி. கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள் நடத்தி வைத்ததோடு பிரம்மோபதேசத்தையும் உபதேசித்தார்.

சமகாலத்தில் இவர் தனது முன்பள்ளிக் கல்வியை சித்தன்கேணி மாதர் சங்க பாலர் பாடசாலையில் செல்வி லீலாவதி மாரிமுத்து அவர்களிடம் கற்று பின் ஆரம்பக்கல்வியை சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்திலும் பின வட்டு இந்துக் கல்லூரியிலும் பயின்று தனது உயர் தரக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அதே போல சிவானந்த குருகுலத்தில் குருப்பட்டம் பெறுவதற்குரிய கல்வி யையும் கற்றுக் கொண்டார். நயினை சிவஸ்ரீ முத்துக் குருக்கள், மட்டுவில் பிரம்மஸ்ரீ. சதாசிவ சர்மா போன்றோர் இவருக்கு கல்வி கற்பித்தனர். இவர் சமஸ்கிருதத்துடன் நாகரம், வானசாஸ்திரம், எண்கணிதம் போன்ற பலவற்றையும் கற்றார்.

பேரனுக்குப் பின் தந்தையார் பிரம்மஸ்ரீ சபாரத்தினசர்மா சிவாலயத்தில் பிரதம குருவானார். வாசுதேவக்குருக்கள் கற்றுக்கொணடிருக்கும் போதே தந்தையாரது வழிகாட்டலில் தனது குல தெய்வமாகிய சித்தன்கேணி சிவாலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைகளை ஆற்றியதோடு அங்கும் வேறு பல ஆலயங் களிலும் மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்ற கிரியைகளுக்கும் பத்ததி வாசித்து வந்தார். அத்துடன் தனது ஆலயத்தின் மூலம் மாணவர்களை ஆன்மீகத்துடன் இணைப்பதற்கு பல்வேறு


விளக்கங்க... றியும் அ... தோடு மா... பெரிதும் பா...

இவர் த... கார்த்தமா... ருடன் ஒ... சகோதரன... வுடன் ஆர... வருகின்ற... பங்காற்றி... தையார் பி... ரின் ஆ... வர்களுக்கு...

## வாழ்த்துரை வழங்கிய பெருந்தன


திருமதி ரூபிணி வரதலிங்கம் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர்


திரு. இளங்கோவன் வடமாகாண ஆளுநரின் செயலாளர்


பேராசிரியர் திரு.எம். வேதநாதன் யாழ். பல்கலைக்கழகம்


திரு.ந.விஜயசுந்தரம், பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை


திரு. தனஞ்... வட்டு இந்...

விளம்பர அனுசரணை

கரிகணன் பிறி

இல. 681,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

+9421-2222717/18, +9421-7397530 , +9421-2222891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதை, சட்டப்புறக்கணிப்பு இலங்கைத் தமிழர்களின் நிலை!

## அவுஸ்திரேலிய ஊடகம் ஆய்வு

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் மீதான சித்திரவதைகள் மற்றும் சட்டப் புறக்கணிப்பு தொடர்பில் கடந்த வருடங்களில் வாதப்பிரதி வாதங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் அவை இலங்கையில் தற்போதும் உள்ளனவா? அல்லது அங்கு என்ன இடம்பெறுகிறது என்பதை அவுஸ்திரேலிய ஏ.பி.சி. ஊடகம் ஆராய்ந்துள்ளது.

இதற்காக இலங்கை அரசாங்கத் தரப்பினரையும் அவுஸ்திரேலிய ஊடகம் பேட்டி கண்டுள்ளது. இதன்படி இலங்கையின் முன்னாள் இராஜதந்திரியான தயான் ஜயதிலக்க தமது கருத்தை வெளியிட்டுள்ளார். இலங்கைய ர்கள் அகதிகளாக அவுஸ்திரேலியாவுக்கு சென்று திரும்பிய பின்னர் இலங்கையில் சித்திரவதைகளுக்கு உள்ளாவதாக எவ்வித சான்றுகளும் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சர்வாதிகார ஆட்சி இடம் பெறுகிறது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப் படுகிறது. எனினும் வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்பட்டு அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 70 வீதமான வாக்குகளை பெற்றதன் மூலம் இந்த கருத்துக்கு இடமில்லாமல் போயுள்ளது.

எனினும் தமிழ் மக்கள் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் அரசாங்கத்தின் மீது அதிருப்தி உணர்வை கொண்டிருக்கிறார்கள் என்பதை ஜயதிலக ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதன் காரணமாகவே தமிழர்கள் நாட்டில் இருந்து வெளியேறுவதற்கான எந்த வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்று தயான் குறிப்பிட்டுள்ளார். ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ரஜீவ விஜேசிங்க, அவுஸ்திரேலிய தமிழ் சம்மேளன தலைவர் விக்டர் ராஜகுலேந்திரன் வெளியிட்டுள்ள கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். இலங்கையில் போரில் வெற்றி பெற்றதாக கூறும இலங்கை இராணுவம் இன்னும் அதிக எண்ணிக்கையில் வடக்கில் குவிந்திருக்கிறது.

இது தமிழர்களின் நாளாந்த வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்கள் தமது நிலங்களில் விவசாயம் செய்யும் உரிமை கூட மறுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இலங்கை அதிகளுக்கு பாதுகாப்பு இருக்கிறது.

எனினும் இரண்டாம் தலைமுறையினருக்கு வருமானத்தை ஈட்டவோ அல்லது உயர்கல்வியை பெறக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. எனவேதான் அவர்கள் அவுஸ்திரேலியாவை நோக்கி வருகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதில் வடக்கில் அதிக இராணுவம் நிலை கொண்டிருப்பதை விஜேசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார். இதன்காரணமாக நாட்டில் நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் சித்திரவதைகள் காரணமாகவே தமிழர்கள் நாட்டில் இருந்து தப்பிச் செல்கின்றனர் என்ற வாதத்தை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார். (6)

# 20 மீனவர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 20 பேருக்கு ஓகஸ்ட் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து ஜூலை மாதம் 21 ஆம் திகதி மீன் பிடிக்க வந்த 20 மனவர்களை கடற்படையினர் கைது செய்தனர். அவர்களுடைய 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர், மன்னார் பகுதியிலுள்ள நீரியல், கடல் வளப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இதைத் தொடர்ந்து 20 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன் பிடிக்க வந்ததாகவும், கடல் வளத்தைச் சேதப்படுத்தியதாகவும் அதிகாரிகள் வழக்குப் பதிந்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

மீனவர்களை விசாரணை செய்த நீதிபதி ஓகஸ்ட் 8 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டார்.

அதன்பேரில், 20 மீனவர்களும் அநுராதபுரம் சிறையில் தடுத்துவைக்கப்பட்டனர். தடுப்புக்காவல் நிறைவடைந்த நிலையில், குறித்த மீனவர்கள் 20 பேரையும் மீண்டும், ஓகஸ்ட் மாதம் 22 ஆம் ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (6)

# நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாம்!

இலங்கையின் 5 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நாமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்படுவார் என பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரம சிங்கவை ஒருபோதும் ஆட்சிக்கு வர இடமளிக்க போவதில்லை. நாட்டின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தெரிவு செய்துள்ளோம்.

நாட்டின் எதிர்கால தலைவராக நாமல் ராஜபக்ஷ தெரிவாகும் வரை இந்த பயணம் மேற்கொள்ளப்படும் எனவும் முத்து ஹெட்டிகம குறிப்பிட்டுள்ளார். (6)

# இலங்கை செஞ்சிலுவை சங்கம்

## காணாமற் போனவர்களின் பட்டியல் தயாரிக்க முயற்சி!

(கொழும்பு)

இலங்கையில் காணாமற் போனவர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளில் இறங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினாலேயே இலங்கையில் காணாமற் போனவர்கள் தொடர் பான விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் அரச சார்பற்ற நிலையில் இந்த முயற்சி களை மேற்கொள்ள செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிதத்துள்ளது.

எனினும் தமது முயற்சிகள் அரசுக்கு உதவும் வகையில் அமைந்திருக்கும் என்றும் அது தெரிவித்துள்ளது.

காணாமற் போனவர்கள் தொடர் பான பட்டியலைத் தயாரிக்கும் செஞ்சிலு வைச் சங்கத்தின் பணி, வரும் செப்டெம்பர் மாதம் தொடக்கம் நடைபெறும் என்று தெரியவருகின்றது. (6)

# இணைய மோசடி குறித்து 1300 முறைப்பாடுகள்

இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரையிலான ஏழுமாதம் காலப்பகுதியில் இணையத்தள மோசடிகள் தொடர்பில் 1300 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அதிகமானவை சமூக வலைத் தளங்கள் தொடர்பானவையெனவும் இலங்கை கணனி நடவடிக்கைப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் கணிசமானவை தமது பெயர்களில் வேறு நபர்கள் பேரளவிலான கணக்குகளை வைத்துள்ளமை, மாற்றி பேணிவருகின்றமை தொடர்பிலானவை என்பது குறிப்பிடத்தக்கது.

இணையத்தள மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளை யாருக்கு எப்படி முறைப்பாடு செய்வது என்பது தொடர்பில் பலர் தெளிவில்லாமல் உள்ளார்கள். பேஸ்புக் தொடர்பான முறைப்பாடுகளை நேரடியாக பேஸ்புக் நிறுவனத்திற்கு முறையிடலாம் அல்லது இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவிற்கு வழங்கலாம். இது பற்றிய மேலதிக தகவல்களை கணனி அவசர நடவடிக்கை பிரிவின் தொலைபேசி இலக்கமான 0112691692 உடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தா. (6)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 21 செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / அரச முகாமையாளர் சேவை<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: B/3497 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 21 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L / சொந்த தொழில்<br>தொ.இ: G/2453 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 42 ½<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: MBA / சுவிஸ் - Not PR<br>தொ.இ: B/3500 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம்3<br>கி.பா: 70 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/2460 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 20<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BIT பட்டதாரி / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/2949 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 60 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / (UK - PR)<br>தொ.இ: G/2467 |
| பிறப்பு: 1963 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 23 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"தகைமை/தொழில்: A/L / அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம்<br>தொ.இ: B/1655 | பிறப்பு: 1987 கிறிஸ்தவம் (RC)<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: இந்துக்களும் பார்க்கலாம்<br>தொ.இ: G/2472 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(31.07.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அண்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பெர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஒரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அண்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மெண்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அண்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மெண்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரெக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அண்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் சில தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைப்பு செயற்பாட்டின் கீழ் இணைக்கப்பட/கையகப்படுத்தப்பட/உட்கொள்ளப்பட இருக்கின்றன. இது குறித்து பொதுமக்களுக்கு அறியத் தருவது என்னவென்றால் இந்த ஒருங்கிணைப்பு செயற்பாடானது மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடனான உங்களது தற்போதைய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வைப்புக்களை எந்தவகையிலும் பாதிக்காது என்பதாகும்.


## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்


- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: seddnbfi@cbsl.lk





# ஆதரவைப் பெற மூவரும் முயற்சி

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ஆதரவினை பெற்றுக்கொள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஐ.தே.க வின் தலைமைத்துவப் பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகியோர் முயற்சித்து வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட சிலர் முயற்சித்து வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்தியாவின் ஆதரவு எந்த பொது வேட்பாளருக்கு கிடைக்கப்பெறும் என்பதனை உறுதி செய்து கொள்ளும் முயற்சிகளில் ரணில் விக்ரமசிங்க, கருஜயசூரிய மற்றும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் முயற்சித்து வருவதாகக் குறிப் பிடப்படுகிறது.

இந்த மூன்று பேருமே இந்திய பிரதமரை சந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரியுள்ளனர். எனினும் இந்தக் கோரிக் கைக்கு இதுவரையில் இந்திய அரசாங்கம் பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொது வேட்பாளர் தொடர்பிலான யோசனைத் திட்டங்கள் இந்தியாவை திருப்திபடுத்த வில்லை எனவும் இதனால் சந்திப்பு நடத்துவதற்கு நேரம் ஒதுக்குவதற்கு இந்திய மத்திய அரசாங்கம் காலம் தாழ்த்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் தொடர்பிலான யோசனைத் திட்டம் சமர்ப்பிக் கப்பட்டதன் பின்னர் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தி அதன் பின்னர் யாருக்கு ஆதரளிப்பது என்பதனை இந்தியா தீர்மானிக்கும் என குறிப்பிடப்படுகிறது. (6)

# நீதி கிடைக்காமைக்கு அமைச்சரே காரணம்



முஸ்லிம்களுக்கு நீதி நியாயம் கிடைக்காமல் போனமைக்கான பாவத்தை செய்தவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமே ஆவார். எனவே, இன்று அது தொடர்பில் முதலைக்கண்ணீர் வடிப்பதால் பலனில்லையென ஐ.தே. கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

18ஆவது திருத்தம் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுடனேயே நிறைவேற்றப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் விசேட வழக்குத் தொடுநர் எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல் தொடர்பாக ஐ.தே.கட்சி எம்.பி ரவி கருணாநாயக முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அளுத்கம, பேருவளையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் முஸ்லிம் மக்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கவில்லை என்றும் எனவே முஸ்லிம்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்காக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தார்.

முஸ்லிம்களுக்கு நீதி, நியாயம் கிடைக்காமைக்கான முழுப்பொறுப்பையும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

17 ஆவது திருத்தம் ஐ.தே.கட்சி உட்பட சபையில் 224 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம் நீதித்துறை, பொலிஸ் அரச சேவைகள் என அனைத்திற்கும் சுயாதீன ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வாறானதொரு நிலையில் நீதித்துறையில் சுயாதீனம் காணப்பட்டது. ஆனால் இந்த 17 ஆவது திருத்தத்தை இல்லாதொழித்து சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்து 18 ஆவது திருத்தத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவு வழங்கி அதனை நிறைவேற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமே ஆதரவு வழங்கினார். இதனால் இன்று சட்டமா அதிபர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், இராணுவத் தளபதி உட்பட அரச உயர் பதவிகளுக்கு ஜனாதிபதியே நியமனங்களை வழங்கும் நிலைமை உருவானது.

ஆனால் 17 ஆவது திருத்தம் நடைமுறையில் இருந்த போது இவ்வாறான அரச உயர் பதவிகளுக்கு ஜனாதிபதியினால் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டாலும் அதனை நிராகரிக்கவும் வேறொருவரின் பெயரை பரிந்துரைக்கவுமான அதிகாரம் அரசியலமைப்பு சபைக்கு இருந்தது. ஆனால் 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப் பட்டதோடு இந்நிலை மாறி அனைத்தும் ஜனாதிபதியின் கைகளில் சிக்கிக்கொண்டது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரண பயத்தை ஒழித்த மார்க்கம்

தட்சசிலம் என்ற நாட்டை கலிங்கதத்தன் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான்.

அவன் பௌத்த மதத்தைத் தழுவியவன்.

புத்த மார்க்கமே உலகில் சிறந்தது என்ற கருத்தோடு மிகுந்த பற்றுதல் கொண்டு அந்த மதத்தின் குருமார்களில் ஒருவன்போல இருந்து வந்தான்.

அந்த நகரத்தில் அப்போது விசாகன் என்ற செல்வந்தன் பெரிய வணிகனாகவும் விளங்கினான். அவனும் பௌத்த மதத்தைச் சேர்ந்தவன்.

அவனுக்கு ரத்தினம் என்ற பெயருடைய மகன் ஒருவன் இருந்தான்.

இளைஞனான அவனுக்குத் தன் தந்தை பின்பற்றும் புத்த மதத்தின் மீது வெறுப்புக்கொண்டான்.

அதனால், புத்த மதத்தையும் தந்தையையும் இகழ்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் ரத்தினம் தன் தந்தையிடம் தந்தையே! பழமையான வேதங்களைக் கொண்ட நம்முடைய மதத்தை மறந்து விட்டீர்கள்.

அந்தணர்கள் வெறுத்து மற்றவர்களை மதிக்கின்றீர்கள்.

புத்த மதக்கொள்கைகளைப் பெரிதாகப்போற்றிப் பிரமிப்பு அடைகிறீர்கள்.

கீழ்மக்களுக்கு அடைக்கலம் தரும் இருப்பிடம் புத்தமதம்.

பிராமணியச் சடங்குகளை மறுப்பதே அதன் கொள்கை.

அருள்நெறி மறந்து, இந்து மதத்துக்குத் துரோகம் விளைவிக்கிறீர்கள் என்று பலவாறு உரக்கக் கத்தினான்.

தந்தை விசாகன் மகனைச் சமாதானப்படுத்த முயன்றார்.

சிறந்த மதத்திற்கும் உலகம் முழுவதும் பரவித் தழுவும் மதத்திற்கும் வேறுபாடு இல்லையா?

பிராமணீயம் போலவே புத்த மதமும் தீய, குரோத பாவங்களை வெறுக்கின்றது.

உறவினருடன் காரணமற்ற சச்சரவுகளை விரும்பவில்லை.

அனைத்து உயிர்களுக்கும் பாதுகாப்பு அளித்து அன்பு வழியை நிலை நிறுத்தும் தாயகமான புத்தமதத்தை அவமதித்துப் பேசாதே.

ஜீவகாருண்யத்தை உயிர்நாடியாகக் கொண்டது.

உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்டது புத்த மார்க்கம்.

மரண பயத்தை ஒழிப்பதோடு உயிர்வதைகளையும் தடுக்கிறது.

இளைஞனாகிய உனக்கு அறிவு வளர்ச்சி போதாது.

உனக்குத் தெரிந்தது கடுகு அளவு, தெரிய வேண்டியது கடல் அளவு.

ஆகையால் உன்னுடைய அற்ப அறிவைக் கொண்டு எதையும் மதிப்பிடும் தகுதி உனக்கு இருப்பதாக எண்ணுவது அறிவீனம் என்று பலவாறு விளக்கிக் கூறினார்.

என்ன சொல்லியும் அவன் புரிந்து கொள்ளாமல், வெறுப்பே அவனிடம் மிகுதியாகக் காணப்பட்டது.

வெறுப்படைந்த தந்தை விசாகன், வேதனையோடு அரசனிடம் சென்று தனக்கும் மகனுக்கும் ஏற்பட்ட வாக்குவாதங்களைக் கூறினார்.

அரசன் ரத்தினத்தை அழைத்துவரச் செய்தான்.

அவன் ஒரு மதவெறுப்பாளன், நாட்டின் நயவஞ்சகன் என்னும் குற்றம் சாட்டி அவனுக்கு மரண தண்டனை விதித்தான்.

மகனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைக் கேட்டதும் விசாகன் அதிர்ச்சி அடைந்தான்.

மகனுக்காக மன்னனிடம் மன்றாடினான்.

மன்னன் விசாகனின் வேண்டுகோளுக்கு சிறிது கருணை காட்டி மகனக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை இரண்டு மாதங்களுக்குத் தள்ளி வைத்து, அதுவரை அவன் தந்தையின் பொறுப்பில் வைத்துக் கொண்டு அதன்பின் தன் முன் கொண்டு வந்து நிறுத்துமாறு உத்தரவிட்டான்.

-தொடரும்-

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆



08.2014
11

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 2492 - ஆர்மீனியா அமைக்கப்பட்டது.
- கி.மு 480 - பாரசிகர்கள் கிரேக்கர்களை கடற்சமரில் வெறறனர்.
- கி.மு 586 - ஜெருசலேமில் சாலமோன் மன்னனால் கட்டப்பட்ட முதலாவது ஆலயம் பாபிலோனியர்களினால் அழிக்கப்பட்டது.
- 355 - நாட்டுத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட குளோடியஸ் சில்வானஸ் உரோமப் பேரரசனாகத் தன்னை அறிவித்தான்.
- 1786 - மலேசியாவில் பெனாங்க்கில் கப்டன் பிரான்சிஸ லையிற் என்பவனால் பிரித்தானியக் குடியேற்றம் அமைக்கப்பட்டது.
- 1804 - இரண்டாம் பிரான்சிஸ் ஆஸ்திரியாவின் முதலாவது மன்னன் ஆனான்.
- 1812 - இலங்கையில் தாவரவியல் பூங்கா அமைக்க பட்டது.
- 1898 - அமெரிக்கப் படைகள் புவெர்ட்டோ ரிக்கோவின மயாகெஸ் நகரினுள் நுழைந்தன.
- 1920 - லாத்வியாவின் அதிகாரத்தை போல்ஷெவிக் ரஷயாவிடம் வழங்கும் உடன்பாடு லாத்வியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் ஏற்பட்டது.
- 1960 - பிரான்சிடமிருந்து சாட் விடுதலையை அறிவித்தது.
- 1968 - பிரித்தானியாவின் நீராவித் தொடருந்து தனது கடைசி பயணிகள் சேவையை நடத்தியது.
- 1972 - வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க தாக்குதல் படையினர் தென் வியட்நாமை விட்டுப் புறப்பட்டனர்.
- 1984 - வானொலி ஒன்றிற்காக தனது குரலை சோதிப்பதற்காக அமெரிக்க அதிபர் ரொனால்ட் றேகன் கூறியது: "எனது சக அமெரிக்கர்களே, ரஷ்யாவை அழிப்பதற்கான சட்டவாக்கத்திற்கு இன்று ஒப்புதல் அளித்திருக்கிறேன். இன்னும் ஐந்து நிமிட நேரத்தில் குண்டுவீச்சு ஆரம்பமாகும்".
- 1999 - ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் முழுமையான சூரிய கிரகணம் தென்பட்டது.
- 2003 - ஆப்கானிஸ்தானுக்கு அமைதி காக்கும் படையை நேட்டோ நாடுகள் அனுப்பின.
- 2003 - ஜெமா இஸ்லாமியா இயக்கத் தலைவர் ரிதுவான இசாமுதீன் (ஹம்பாலி) பாங்கொக் நகரில் கைது செய்யப்பட்டார்.
- 2006 - யாழ்.குடாநாட்டையும் இலங்கையின் தென்பகுதியையும் இணைக்கும் ஏ9 நெடுஞ்சாலை காலவரையறையின்றி மூடப்பட்டு யாழ்ப்பாண மக்கள் குடாநாட்டுக்குள் முடக்கப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1837 - மரீ பிரான்சுவா சாடி கார்னோ, பிரெஞ்சு அரசியலவாதி (இ. 1894)
- 1897 - எனிட் பிளைட்டன், எழுத்தாளர் (இ. 1968)
- 1920 - மைசூர் வீ துரைசுவாமி ஐயங்கார், கருநாடக இசை வீணை வாத்தியக்கலைஞர் (இ: 1997)
- 1937 - ஜான் ஆபிரகாம், திரைப்பட இயக்குநர் (இ. 1987)
- 1943 - பெர்வேஸ் முஷாரஃப், பாகிஸ்தான் அதிபர்
- 1959 - தர்மரத்தினம் சிவராம், இலங்கையின் பிரபல ஊடக வியலாளர் (இ. 2005)


### இறப்புகள்

- 1747 - விஜய ராஜசிங்கன் - கண்டி நாயக்க மன்னன்
- 1890 - ஜான் ஹென்றி நியூமன், ஆங்கிலக் கர்தினால், ஆக்ஸ்போர்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவர் (பி. 1801)
- 1956 - ஜக்சன் பொல்லொக், அமெரிக்க ஓவியர் (பி. 1912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி அழைத்தால் அரசியலுக்கு வருவேன்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைத்தால் அரசியலுக்கு வருவேன் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிரச தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அழைத்தால் அரசியலில் ஈடுபடுவேன். இல்லையென்றால் நாட்டுக்காக செய்யவேண்டிய சேவையை செய்துகொண்டிருப்பேன்.

அரசியலில் ஈடுபடுவதற்கு அனுமதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்க வேண்டும். அதற்கு பின்னரே எங்கு, எவ்வாறு போட்டியிடுவது என்பதனை தீர்மானிக்க முடியும்.

ஜனாதிபதியின் சகோதரர் என்ற போதிலும் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பிழையாக பயன்படுத்த மாட்டேன். மக்களின் நலன்களை உறுதி செய்வதே எனது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# முக்கியஸ்தர்களை கொலை செய்ய சதி

## நால்வர் கைது

அரசாங்கத்தின் இரண்டு முக்கியஸ்தர்களை கொலை செய்யும் நோக்கில் திட்டம் ஒன்றை முன்னெடுத்த நால்வரை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் முன்னாள் இராணுவ கப்டன் எனவும் ஏனையோர் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் எனவும் திவயின தகவல் வெளியிட்டுள்ளது. மேற்படி நான்கு பேரும் இந்த திட்டத்தை செயற்படுத்த புலம்பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளிடம் நிதி கோரியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ கப்டன் யான்ஜீ என்ற புனைப் பெயரால் அழைக்கப்படுபவர் என புலனாய்வு பிரிவின் உயர்மட்ட தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த நான்கு பேரும் வெளிநாடு ஒன்றில் கைது செய்யப்பட்டு உடனடியாக இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவர்கள் தமது இரகசிய திட்டத்தை செயற்படுத்த இலங்கைக்கு வர திட்டமிட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர.

இவர்கள் சர்வதேச பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும் திவயின கூறியுள்ளது.

மலேசியாவில் அண்மையில் கைது செய்யப்பட்ட நான்கு பேர் பற்றியே திவயின இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. (6)

# தாக்கப்பட்ட பல்கலை. தமிழ் மாணவன் தனக்குத்தானே காயம் ஏற்படுத்தினாராம்

## உயர் கல்வி அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக கட்டமைப்பில் மீண்டும் நெருக்கடிகளை தோற்றுவித்து அதனை இனவாத மோதலாக மாற்றும் சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

தம்புள்ளயில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினராக செயற்பட்டதாக கூறப்படும் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இந்த மாணவர் பற்றிய தகவல்கள் அறியப்பட்டிருந்த போதிலும் பரீட்சைகள் முடியும் வரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின மாணவர் ஒருவர் தனக்குத்தானே காயத்தை ஏற்படுத்தி கொண்டு அதனை தாக்குதலாக காட்ட முயற்சித்துள்ளார்.

இதன் மூலமாக இனவாத மோதல் ஒன்றை ஏற்படுத்த முயற்சித்துள்ளனர் எனவும் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ள போதிலும் விடுதியில் தங்கியிருந்த மாணவரை வெளியில் இருந்து வந்த குண்டர்கள் சிலர் தாக்கியுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியிருந்தது.

அரசாங்கத்தின் குண்டர்களே மாணவரை தாக்கியதாகவும் விடுதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த நிலையில், பாதுகாப்பு தரப்பினரின் உதவியின்றி எவரும் பல்கலைக்கழக விடுதிகளுக்குள் பிரவேசிக்க முடியாது எனவும் பாதுகாப்பு தரப்பினரின் உதவியுடனேயே மாணவர் தாக்கப்பட்டதரகவும் மாணவர் ஒன்றியம் கூறியிருந்தது.

அரசாங்கம் மாணவர்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டி பிரச்சினைகளை வேறு பக்கம் திசை திருப்ப முயற்சித்து வருவதாகவும் ஒன்றியம் குற்றம் சுமத்தியிருந்தது. (6)

# இராணுவ வாகனம் மோதி ஐவர் வைத்தியசாலையில்

வவுனியா புதுக்குளம் பகுதியில் இராணுவ கென்டெயினர் வாகனத்தில் மோதுண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற நால்வரும் வாகன சாரதியும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புதுக்குளம் பகுதியில் ஒரு மோட்டார் சைக்கிளில் சென்ற நால்வர் மீது இராணுவ கென்டெய்னர் வாகனம் மோதியதாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற மருக்காரம்பளை வீதி மணிபுரத்தை சேர்ந்த ராஜன் குருபன் (வயது 23), எஸ் கிசோகுமார் (வயது 21), த.நந்தகுமார் (வயது 24), ரா.ஜெனிசன் (வயது 20) ஆகியோரும் இராணுவ வாகன சாரதியான பெரியகாடு இராணுவ முகாமை சேர்ந்த கோப்ரல் லக்மல் ஆகியோருமே வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (6)

# உங்கள் பிறந்த எண் 08 இல் கூட்டெண் 06 இன் பலன்கள்



62

### தோற்றம்

இவர்கள் உயரமாக இருப்பர். ஒளிமிக்க கண்களில் செவ்வரி ஓடியிருக்கும். கன்னங்கள் உப்பியிருக்கும். கண்கள் பெரிதாக இருக்கும். மூக்கு சிறிதாக குண்டாக அமைந்திருக்கும். தலைமுடி அதிகம் அடர்ந்து விறைப்பாக இருக்கும். பற்கள் இடைவெளியுடன் உறுதியற்றே இருக்கும். சிறிய வாய் தடித்த உதடுகளுடனிருக்கும். குண்டு முகம், சாதாரண அளவு நெற்றி, உறுதியான தாடை, நீளமான கை, கால்களிருக்கும். மாநிறமாக இருப்பர். கவர்ச்சியான தோற்றமுள்ளவரே.

### குணம்

முரட்டுப் பிடிவாதமுடையவர்கள். தமக்கு முக்கியத்துவத்தையும் தம் சுகத்தையுமே முதலில் வேண்டுவர். நல்லவர். பிறர் குறைகளையும் தீர்க்க உதவுவர். பெரிய மனிதத் தன்மை இருக்கும். நன்றாகப் படிப்பர். அநேகர் இளம் வயதில் தாயை இழந்துவிடுவர். பசி தாங்க மாட்டார். பயணம் அதிகம் செய்ய வேண்டிவரும். பாசமுள்ளவரானாலும் எங்கே வேண்டுமானாலும் யாருடனும் இருப்பர். சூழ்நிலையோடு ஒத்துப்போவர். சுகத்தை மறைக்கத் தெரியாது. துக்கத்தை உள்ளத்தில் மூடி விடுவர்.

தெய்வ பக்தி இருக்கும். மூடத்தனத்தை எதிர்ப்பார். காரியவாதிகள். பிறரை அடக்கியாளுவர். நினைத்ததை நிறைவேற்றிக்கொள்ளப்படுத்திவிடுவர்.

அழகு உணர்வுள்ளவர். கையெழுத்து அழகாயிராது. பெண்களை மிக விரும்பி நேசமாகப் பழகுவர். குடும்பத்திலேயே பெண் உறவினர் ஆதரவில் வளருவர். சாப்பாடு மிகச் சுவையாக இருத்தல் முக்கியம். தாம் தம்மைச் சார்ந்தோரிடம் பாசம் கொண்டிருப்பர். தம் மதம் தம் கொள்கை மேல் மிகப் பற்றுடனிருப்பர். தமக்கு சுகம் வேண்டி இவர் பிறர் சுகத்தைக் கெடுக்கமாட்டார். ஆனால், பொருட்களைக் காப்பாற்றி வைத்துக்கொள்ளமாட்டார்.

புரிந்துகொள்ளும் அறிவும் கல்வியறிவும் பலமொழிப் பாண்டித்யமும் அமையும். பயமும் இருக்கும். துணிச்சலும் பல சங்கதிகளில் பல சமயத்தில் உண்டாகும். பிறர் யோசனை சாதகமாக இருந்தால் கேட்பர். தவறுகளை விரும்பமாட்டார். கெட்ட பழக்கங்களை வெறுத்துக் கண்டிப்பர். சூடான வார்த்தைகள் வரும்.

திரவ நிலை உணவை அதிகம் விரும்புவர். இரக்க மனம் உண்டு. பொதுத் தொண்டு செய்வர். பிரபலமும் புகழும் பொருளும் அடையும் அதிர்ஷ்டம் வரும். தொழில் திறமை சுறுசுறுப்பு அதிகம் உண்டு.

வெட்கம், கூச்சம் இருக்காது. கற்பனை, கவிதை, கதை எழுதும் ஆற்றலும் பேச்சுத் திறமையும் இருக்கும். பிற உயிர்கள் வேதனை கண்டால் மனம் கசிந்துருகுவர். ஓவியக்க்லையை விரும்புவார். அதில் திறமை வராது. சண்டைக்காரராகவே வாழ்க்கையில் எதிர் நீச்சலடித்துப் போராடி வெற்றிப் பெறுவர். வேகமானவர். செயல்வீரர்.

### குடும்பம்

பிறந்த குடும்பம் பெரியது. பிறந்த இடத்திலிருந்து வெளியேறி வசிப்பர். பெற்றோரை விட்டும் தனித்திருந்தும் வளருவர். இளவயதில் பெற்றோரில் ஒருவரை இழப்பர். அநேகமாக அது தாயாகவே இருக்கும். உடன்பிறந்தார் இருக்க மாட்டார். இருந்தாலும் உதவ மாட்டார். தந்தை மேல் பற்றுண்டு. ஆனாலும் பெரிதாகாது. கவர்ச்சியுள்ள இவர்களுக்கு வெளி ஆதரவு அதிகம் கிடைக்கும். சிறுவயதிலிருந்தே அதிர்ஷ்டம் அடிக்கும். அவசியத் தேவை குறையாமல் கிடைக்கும். இவரால் இவர் தந்தை பொருளும் மகிழ்வும் அடைவார். இவர் காதல் புரிவர். மணப்பர். ஆனால், மனைவியால் சுகம் அமையாது. மனைவி நோயாமலோ எதனாலோ துன்பமே தருவாள். இரண்டாம் மனைவி வருவாள். இவள் அழகாக இருப்பாள். நிம்மதி தருவாள். ஆனால், இவர் முழுநிறைவு அடையமாட்டார். சண்டை, சச்சரவிட்டபடி வாழுவார்.

### தொழில்

கற்பனைவளமும் கவிதைமனமும் கொண்ட இவர்கள் கலை, கலை சார்ந்த தொழிலில் மிகப் பிரகாசிக்க முடியும். ஆனால், அரசியல் ஈடுபாடு அதிகமுண்டாகும். பாட்டு, இசையமைப்பு, பாடல் புனைதல் கதைவசனம் எழுதுதல், நடித்தல் இயக்குநராக வேலை செய்தல் எல்லாம் இவருக்கு வரும். இன்ஜினியர் என, வக்கீலாக மருத்துவராக, கணினி நிபுணராக, நகைச்சுவையுடன் பேசும் பேச்சாளராக, தொழிற்சாலை நிர்வாகிகளாக ஜவுளி, பட்டு, முத்து, வைர வியாபாரிகளாக எல்லாம் வரக்கூடிய வாய்ப்பு உள்ளவர். இரும்பும் வெள்ளியும் கையாண்டு வெற்றி பெறுவார். போர்க்கலை பயிற்சி தரலாம். ஜோதிடம் ட்ராவல்ஸ் பெண்கள் உபயோகப்பொருட்கள் அழகுப் பொருட்களுடன் வாசனைத் திரவிய வியாபாரம் எல்லாம் செய்யலாம். சிறந்த கல்வியாளராவர். விஞ்ஞானமும் யோக வேதாந்தமும் கற்றுப் போதிக்கும் ஆசிரியர் ஆகலாம். அணு சக்தி விஞ்ஞானியாகலாம். அரசியல்தலைவராகலாம். நூல்கள் எழுதிப் பதிப்பித்து வெளியிடலாம். எது செய்தாலும் மிக வேகமாக முன்னுக்கு வருவர். பணம் வசதிக்குறைவு ஏற்படும். மிகச் சிறந்த முன்னணி விளையாட்டு வீரராகலாம்.

### நோய்

டென்ஷன் பி.பி. இவற்றின் மிகுதியால் இதயப் பாதிப்பு ஏற்படலாம். வயிறு தொடர்பான கோளாறு ஏற்படும். இவர்களுக்கு வயிறும் குடலும் பலவீனமானவை. அதிக உப்பு, புளி, காரம் உண்ணக்கூடாது. குடிக்கக்கூடாது. தலை வலி கண் நோய் நரம்புத் தளர்ச்சி உடல் சோர்வு கெட்ட கனவு உண்டாகும். காது குறைப்படலாம். சருமப் பாதிப்பான நோயும் வரும். கபத்திலுண்டாகும் நோய் வரும். சளித் தொல்லை, மூச்சுக்குறைபாடு வரலாம்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நிபுணர்கள் குழுவில் இந்தியர் ஒருவரும் இணைப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்களின் ஆலோசனைக் குழுவின் எண்ணிக்கை ஆறாக உயர்த்தப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ள நிலையில் இந்த ஆலோசனைக் குழுவில் இந் தியர் ஒருவரும் நியமிக்கப்பட வுள்ளதாக தகவல்கள் வெளியா கியுள்ளன.

இலங்கையின் வடக்கு- கிழ க்கு மாகாணங்களில் யுத்த காலப பகுதியில் அதாவது 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 முடிவு க்கு கொண்டு வரப்பட்ட காலப்பகுதி யில் காணாமற்போனோர் குறித்து விசாரணைகளை மேற்கொள்வத ற்காக நியமிக்கப்பட்ட ஜனாதி பதி ஆணைக் குழுவிற்கு ஆலோ சனை வழங்கும் சர்வதேச குழுவில் இந் தியர் ஒருவரும் இடம்பெறவுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள ஆவ்டாஸ் கவுசல் என்ற மனித உரிமை பணி யாளரே இந்த குழுவில் இடம் பெறவுள்ளார்.

இந்திய அரசாங்கம் இந்த நியமனத்துடன் தொடர்புபட்டி ருக்கவில்லை என இராஜதந் திர வட்டாரங்கள் தெரிவித் தன.

இது குறித்த வர்த்தமானி அறிவிப்பு அடுத்த வாரம் வெளி யாகவுள்ளது.

இதேவேளை இந்த குழுவில் ஜப்பானிய பிரதிநிதி ஒருவ ரும் இடம்பெறவுள்ளதாகவும் இது குறித்த பேச்சுக்களுக்காக யசூசி அகாசி இலங்கை வரவுள் ளதாகவும் தெரிய வருகிறது.

(6)

# இராணுவத்திற்கு செய்த துரோகமாக நிபுணர்கள் நியமிப்பை கருதவில்லை

## தளபதி ரத்நாயக்க விளக்கமளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மூவர் கொண்ட ஆலோசனைக்குழுவை நியமித் ததை இராணுவம் துரோகமாக கருதவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மூவர் கோண்ட ஆலோசனைக்குழுவை நியமித்ததை இராணுவம் துரோகமாக கருத வில்லை. அவர்கள் ஆலோசனை வழங்குவதற்காகவே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

நாங்கள் எங்கள் கடமையை மாத்திரம் செய்துள்ளதால் எது பற் றியும் நாங்கள் கவலையடைய தேவையில்லை.

நாங்கள் ஒரு தொழில் சார் தன்மையுடைய இராணுவம். அத னால் எவரும் எமது செயற்பாடு களை விசாரணை செய்வது குறி த்து அலட்டிக் கொள்ளவில்லை. நாங்கள்தவறுகள்எதனையும் செய்ய வில்லை.

உலகில் எந்தவொரு இராணு வம் ஈவிரக்கமற்ற எதிரிக்கு எதிராக போராடும்போது கனரக ஆயுதங் களை பயன்படுத்துவது வழமை நாங்களும் அதனையே செய்தோம்.

கனரக ஆயுதங்களை யுத்தத் தின் இறுதியிலேயே பயன்படுத்த தீர்மானித்தோம். பொதுமக்களை மீட்பதற்காக என அவர் தெரிவித் துள்ளார்.

**யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவர்**

இதேவேளை யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக் கப்படுவர் என இராணுவத் தளபதி தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

நம்பகமான முறையில் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசா ரணை நடத்தி அதில் குற்றவாளி என நிரூபிக்கப்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட் டுள்ள விசாரணைக் குழுவினால் எவ்வித அச்சுறுத்தல்களும் கிடை யாது எனவும், இதனை ஓர் துரோ கச் செயலாக கருத முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படையினர் தியாக உணர்வுடன் அரசாங்கத்தின் உத்தரவிற்கு அமைய எறிகணை போன்ற ஆயுத ங்களை இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பயன்படுத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையை அறிந்து கொள்ள விரும்பாத சிலர் போலியாக குற்றம் சுமத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (6)

# இராஜதந்திரிகள் சேவையில் குற்றவாளிகளே அதிகமுள்ளனர்

## சோபித தேரர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)



இலங்கையின் இராஜதந் திரிக ளாக கல்வியறிவு படைத்தவர்களை நியமித்து நாட்டின் செல்வாக்கை உய ர்த்த வேண்டியது நமது தாய் நாட்டிற்கு செய்ய வேண்டிய மிக முக்கிய பொறுப் பாகும் என்று சோபித தேரர் தெரிவித் துள்ளார்.

இன்று இந்த நாட்டில் நீதிமன் றங்களால் குற்றவாளிகள் என தண்டனை பெற்றவர்கள், அரசின் ஆதரவாளர்கள், போதிய கல்வி ஆற்றல் இல்லா தவர்களையே இந்த அரசு இரா ஜதந்திரிகளாக நியமனம் செய் துள்ளது.

இதுவே சர் வதேச நாடுகளில் நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அபகீ ர்த்திக்கு காரணமென நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலா ளர்கள் சந்திப்பில் சோபித தேரர் கவலை தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் ஐ.தே. கட்சியை சேர்ந்த கரு ஜயசூரியவும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (6)

# மாணவன் மீது கத்திக்குத்து

(கொழும்பு)

கல்விப்பொதுத் தராதர உயர் தரப்பரீட்சைக்கு தோற்றியுள்ள மாணவன் ஒருவன் மீது இனந் தெரியாத நபர் ஒருவர் கத்தியால் குத்திய சம்பவம் ஒன்று அம்பலாங் கொடையில் இடம்பெற்றுள்ளது.

அம்பலாங்கொடை தேவான ந்த வித்தியாலயத்தில் அமைக்கப் பட்டுள்ள பரீட்சை மத்திய நிலை யத்தில் பரீட்சை எழுதிவிட்டு வெளி யேறி வீதியில் சென்றுகொண்டி ருந்த மாணவன் மீதே இனந் தெரி யாத நபர், நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணி யளவில் கத்தியால் குத்தியுள்ளார்.

மாணவனின் இதயத்துக்கு அண மையிலேயே கத்திக்குத்து காய ங்கள் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (6)

# இன்று ஒரு தகவல்

## கலியுகம்

"அப்பா மகனைப் பார்த்து கடைக்குப் போய் பேப்பர் வாங்கிக் கொண்டு வா!" என்கிறார். அதற்கு அவன் "வேற ஆளைப் பாருங்க" என்று சொல்லிவிட்டு போகிறான். "உங்கள் பிள்ளையே உங்க ளுக்கு இப்படி சொல்லி விட்டுப் போகிறானே!" என்று கேட்டால் "அவனைச் சொல்லிக் குற்றமில்லை. கலி முற்றிவிட்டது" என்கிறார் அப்பா.

இந்த யுகங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ தெரியவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி என்ன சொல்கிறார் கள் என்று பார்ப்போம். வருடம்-மாதம்-வாரம்-நாள் இப்படி யுக ங்கள் நான்கு. போன வருடம் உன்னை சென்னையில் பார் த் தேன் என்று சொல்ல முடியும். ஆனால் போன யுகத்தில் நான் உன்னை அங்கு பார்த்தேன் என்று சொல்ல முடியுமா?

எந்தெந்த யுகங்கள் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்ப தற்கு "மேதாதிதி" என்பவர்தான் முதலில் விளக்கம் கொடுத்தார். அவரின் கணிப்பின்படி கிருதயுகம் 4800 வருடம், திரோதா யுகம் 3600 வருடம், துவாரகயுகம் 2400 வருடம், கலியுகம் 1200 வருடம். சாஸ்திர ரீதியாக வேறு கணக்கு சொல்கிறார்கள் அவர்களின் கணக்கின் படி வருடம் 1000, 2000,3000, 4000 என்று உள்ளது.

சுமார் 60 வருடத்துக்கு முன் பரமஹம்ஸ ஸ்ரீராஜ நாராயண் ஷட் சாஸ்திரி என்பவர் ஒரு நூல் எழுதினார். அதில் பல ஆராய்ச் சிகள் செய்துள்ளார். 1943 ஓகஸ்ட் முதலாம் திகதி கலியுகம் முடிந்து கிருதயுகம் பிறந்து விட்டது என்கிறார். பாகவத சுலோ கப்படி சூரியன், சந் திரன், குரு, பூச நட்சத்திரங்கள் எல்லாம் சம காலத்தில் ஒரே இராசியில் பிரவேசிக்கும் போது அல்லது சந் திரன், சூரியன், குரு இந்த மூன்றும் பூச நட்சத்திரத்தில் ஒரே இரா சியில் ஒரே நேரத்தில் சேரும் போது கலியுகம் முடிந்து கிருதயுகம் ஆரம்பமாகும்.

அந்த பூரண யோகம் 1943 ஓகஸ்ட் முதலாம் திகதி வந்து விட்டது. அது தான் இவர் சொல்லும் கணக்கு! இருந் தாலும் கிருதயுகத்தின் முழுப்பலனும் கிடைப்பதற்கு 100 வருடங்கள் ஆகுமாம். கிருதயுகத்தில் மக்களுக்கு நோய் வராதாம். அனை வரின் கோரிக்கையெல்லாம் பூர்த்தியாகுமாம்! மனிதர்களின் ஆயுள் 400 வருடமாம்! அதன் பின்னர் மறுபடியும் யுகம் மாற மாற- தர்மத்தின் அளவு குறைய குறைய ஆயுளும் குறை யுமாம்! கிருத யுகத்தில் ஒரே மதம்! ஒரே கடவுள்! என்ற நிலை மைக்கு உலகம் வந்துவிடுமாம்! தருமரின் காலத்தில் நடந்த கதை ஒன் றும் உண்டு! அது துவாரக யுகத்தின் கடைசிக் கட்டம்.

அப்பொழுது ஒருவன் தனது நிலத்தை இன்னொருவனுக்கு விற்றான். நிலத்தை வாங்கியவன் அதில் உழவு செய்ய ஆரம் பித்தான். நிலத்தை உழும்போது அதில் ஒரு புதையல் கிடைத் தது! உடனே அதை எடுத்துக் கொண்டு நிலத்தை விற்றவ னிடம் போனான்.

"இதோ பாருங்கள்! இந்த புதையல் உங்களுக்குத் தான் சொந்தம். நீங்கள் நிலத்தைத்தான் என்னிடம் விற்றீர்களே தவிர புதையலை அல்ல! அதனால் புதையலை எடுத்துக் கொள் ளுங்கள்!" என்றான். ஆனால் அவன் அதை வாங்க மறுத்து விட்டான். "இந்தப் புதை யல் உனக்குத்தான் சொந்தம். எப்பொ ழுது நிலத்தை விற்றேனோ அப்பவே இதையும் விற்றதாக அர்த்தம்!" என்றான்.

இருவரும் தருமரிடம் போய் தங்களுடைய பிரச்சினை களை சொல்கிறார்கள்! என்ன தீர்ப்பு வழங்குவது என்று தெரியாமல் முழித்தார் தருமர். கடைசியில் ஒரு பத்து நாள் கழித்து வரச் சொல்லி அவர்களை அனுப்பி விட்டார். அதற்குள் கலியுகம் பிறந்து விட்டது! அதன் பின்னர் இருவரும் வந்தனர்.

நிலத்தை விற்றவன் புதையல் எனக்குத் தான் சேர வேண்டும் என்கிறான். வாங்கியவன், "அதெல்லாம் கிடையாது... எப்பொ ழுது நிலத்தை விற்றாரோ அப்பொ ழுதே புதையலையும் விற்று விட்டார்" என்று அர்த்தம் என்கிறான்!

தருமர் சிரிக்கிறார். கலியுகம் பிறந்து விட்டது என் பதை உணர்கிறார். ஒருவர் கத்தரி விதை வாங்கிக் கொண்டு வந்தார். அதை தனது நெருங்கிய சிநேகித னிடம் கொடுத்து உங்கள் தோட்டத்தில் போடுங்கள் என்றார்.

"காசு எவ்வளவு" என்றார் இவர். "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் போய் விட் டார் அவர். ஒருநாள் தற்செயலாக நண்பரைப் பார்க்க வந்தவர், "கத்தரி எப்படி இருக்கிறது" என்றார் நண்பர்.

"நன்றாக காய்த்திருக்கிறது" என்றார் நண்பர். அப்படியா... "ஒரு நான்கு காய் கொடுங்கள்... வீட்டுக்கு கொண்டுபோக..." என்றுகேட்டார். அதற்கு அவர், "ஐய்யய்யோ! காயெல்லாம் முற் றிவிட்டதே" என்றார்.

இவருக்கு முகம் வாடி விட்டது. திரும்பி வரும்போது, உண் மையை அறிவதற்காக அந்த ஊர்க்காரரைப் பார்த்து, "அதோ அந்த வீட்டில் கத்தரிக்காய் முற்றி விட்டதா" என்று விசாரித்தார். அதற்கு அவர் "காய் முற்றவில்லை... கலிமுற்றிப் போச்சு!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா ஒதுங்குகிறதா? பதுங்குகிறதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதுடெல்லிக்கான பயணம் எப்போது சாத்தியமாகும் என்ற கேள்வி பல வாரங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீண்டகாலமாகவே முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாக வடக்கு மாகாணசபை நிறுவப்பட்ட பின்னர், ஏற்பட்டுள்ள சூழல் குறித்தும் நிலையான அரசியல் தீர்வு காண்பது குறித்தும் வடக்கிலுள்ள நிலைமைகள் குறித்தும் இந்தியாவுடன் பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆர்வம் கொண்டிருக்கிறது.

முன்னைய காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசாங்கம் பதவியில் இருந்த போது, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப்பேச்சு நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அது சாத்தியமாவதற்குள், அந்த அரசின் ஆயுள் முடிந்து போனது. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடந்துகொண்டிருந்த போதே, புதிய அரசு அமைந்தவுடன் புதுடெல்லியுடன் பேச்சு நடத்துவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தெரிவித்திருந்தனர். இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்டதும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தனும் வடக்கு மாகாணசபையின் சார்பில் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் கடிதங்களை அனுப்பியிருந்தனர். அந்தக் கடிதங்களில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுவதற்கு விருப்பம் வெளியிடப்பட்டிருந்தது. அதேவேளை நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்குச் சென்றுபோது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தன்னுடன் துணைக்கு வருமாறு வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், அதனை அவர் நிராகரித்து விட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்தது போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பதவியேற்பு விழாவுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழ்நாட்டில் எழுந்த போதும் அதனை இந்திய அரசாங்கம் நிராகரித்துவிட்டது. சார்க் தலைவர்களுக்கு மட்டும் விடுக்கப்பட்ட அழைப்பே அதுவாகும்.


வெளிநாடுகளில் இருந்து வேறு எவரும் அழைக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அந்த நிகழ்வுக்குத் தம்மை அழைக்க வேண்டும் என்று எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு எதிர்பார்த்திருந்தால், அது அவர்களின் முட்டாள்த்தனம். எனினும் கூடிய விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்திய பிரதமர் நரேந்திர மோடி அழைத்துப் பேசுவார் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. ஆனால், கடந்த மேமாத இறுதியில்தான் பதவியேற்ற நரேந்திர மோடியின் தலைமையிலான புதிய அரசாங்கம் நிலைமைகளை அவதானித்து, தமது வழக்கமான பணிகளை ஆரம்பிக்க எப்படியும் ஜூலை மாதமாகிவிடும் என்று அப்போதே தகவல்கள் கசிந்திருந்தன.

இப்போது ஜூலை முடிந்து ஓகஸ்ட் மாதமும் வந்துவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான அழைப்பு மட்டும் இன்னமும் இந்திய அரசாங்கத்திடம் இருந்து வரவில்லை. இதற்கிடையில் ஜூலை நடுப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரைக் கொண்ட குழு புதுடெல்லி செல்லவுள்ளதாக முதலில் தகவல்கள் வெளியாகின. அப்போது புதுடெல்லியிலிருந்து தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் எனினும் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கான நாள் குறித்து இன்னமும் அறிவிக்கப்படவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நரேந்திர மோடியைச் சந்திக்க இம்மாத துவக்கத்தில் புதுடெல்லி செல்லவுள்ளதாக மீண்டும் கடந்தவாரம் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின. ஆனால், புதுடெல்லியில் இருந்து அழைப்பு ஏதும் வரவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கநாதனும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை புதுடெல்லிக்கு அழைக்க இந்திய அரசாங்கம் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது உறுதியாகியிருக்கிறது. எதற்காக இந்த தாமதம் - ஏன் இந்திய அரசாங்கம் இழுத்தடிக்கிறது என்ற கேள்விகள் இப்போது மெல்ல மெல்ல எழும்பத் தொடங்கியுள்ளது. ஏனென்றால் பா.ஜ.க அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக- இலங்கை விவகாரத்தில் அதன் நிலைப்பாடு தொடர்பாக வெளியாகும் தகவல்கள், சில சந்தேகங்களை ஏற்படுத்தவே செய்கிறது.

குறிப்பாக பா.ஜ.கவின் வெளிவிவகாரக் கொள்கைப் பிரிவைச் சேர்ந்த கலாநிதி சேஷாத்ரி ராமானுஜன் சாரி, வெளியிட்டுள்ள கருத்து இங்கு முக்கியமானது. தமிழர் பிரச்சினை என்பது இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்றும் அது சர்வதேச மயப்படுத்தப்படக் கூடாது என்பதே பா.ஜ.க அரசின் நிலைப்பாடு என்றும் அவர் கூறியிருக்கிறார். அந்த வகையில் பார்க்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடெல்லிக்கு அழைத்துப்பேசுவது பா.ஜ.கவின் வெளிவிவகாரக் கொள்கைக்கு முரணானது. அதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்காமல் புதுடெல்லி காலம் தாழ்த்தி வருகிறதா என்ற சந்தேகங்கள் ஏற்படத்தான் செய்கின்றன.



அதேவேளை புதுடெல்லியில் புதிய அரசாங்கம் அமைந்து இப்போதுதான் இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த இரண்டு மாதங்களிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இந்திய வெளிவிவகார அமைச்சும் இறுக்கமான நிகழ்ச்சி நிரலுடன் ஓடிக்கொண்டிருப்பதையும் உணர வேண்டும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்நாட்டுப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான உத்திகளை வகுக்க வேண்டிய நிலையில் இருந்ததுடன் இந்தக் கால இடைவெளிக்குள் இரண்டு வெளிநாட்டுப் பயணங்களையும் முடித்துக் கொண்டு திரும்பியிருக்கிறார். பூட்டானுக்கும் பிறேசிலுக்கும் அவர் பயணங்களை மேற்கொண்டுள்ளதுடன் நேபாளம் ஜப்பான் அமெரிக்கா உள்ளிட்ட அடுத்தடுத்த வெளிநாட்டுப் பயணங்களையும் எதிர்நோக்கியிருக்கிறார்.

அதுபோலவே இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், பதவியேற்ற பின்னர் தொடர்ச்சியான வெளிநாட்டுப் பயணங்கள், சிக்கல்கள், சந்திப்புகளுக்குள் சிக்கியிருக்கிறார் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். அவர் முதலில் பங்காளதேசுக்கும் பின்னர் பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் பயணங்களை மேற்கொண்டதுடன் அடுத்து மியன்மாருக்குச் செல்லவும் திட்டமிட்டுள்ளார். இதற்கிடையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி பிரதிச் செயலர் வில்லியம் பேர்ன் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சராக இருந்த வில்லியம் ஹேக் மற்றும் சீனா, உகண்டா, பிரான்ஸ், சிங்கப்பூர், ஓமான், மியான்மர், கட்டார் உள்ளிட்ட பல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும் இந்த இரண்டு மாதங்களிலும் சுஸ்மா சுவராஜை சந்தித்துள்ளனர். இவை தவிர ஈராக்கில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்கும் விவகாரம் உள்ளிட்ட சிக்கல்களையும் சந்திக்க நேரிட்டது.

ஆக புதுடெல்லியில் அமைந்த புதிய அரசாங்கம் இந்த இரண்டு மாதங்களிலும் தன்னைச் சுற்றி நடக்கும் தீவிரமான விவகாரங்கள் குறித்தே கவனம் செலுத்த வேண்டிய நிலை இருந்தது என்பதை மறுக்க முடியாது. இந்தச் சிக்கலுக்குள் தமிழர்களின் பிரச்சினை குறித்து ஆலோசிக்கவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுப்பதற்கோ, புதிய அரசுக்கு நேரம் கிடைத்திருக்கும் என்று கருத முடியவில்லை. அதைவிட இந்தியா மட்டுமல்ல எந்தவொரு நாடுமே, தமது தேவைகள், நலன்களுக்கே முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுக்கும். இப்போதைய நிலையில் இலங்கை அரசாங்கத்துடன் உறவைப் பலப்படுத்திக் கொள்வதன் மூலம் அடையக் கூடிய நன்மையை விட, தமிழர் தரப்புடன் உறவைப் பலப்படுத்திக்கொள்வதன் மூலம் கூடுதல் நலன்களை இந்தியாவினால் பெற்றுவிட முடியும் என்று கூற முடியாது.

எனவே, சந்தர்ப்பம் வரும் போது பின்னர் ஒருமுறை பார்த்துக் கொள்ளலாம் என்ற அலட்சியம்கூட புதுடெல்லியிடம் இருக்கலாம். அதற்கான வாய்ப்புகளையும் நிராகரிக்க முடியாது. எவ்வாறாயினும் தமிழர் பிரச்சினை இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்று ஒதுக்கி வைத்துவிட்டு இந்தியாவினால் முழுமையாக ஒதுங்கி நின்று விட முடியாது. அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுவது தாமதிக்கப்படுகிறது என்று கருதவும் முடியாது.

பொதுவாகவே இலங்கையுடனான உறவு விடயத்தில், இலங்கைப் பிரச்சினை விவகாரத்தில் புதிய அரசாங்கம் நிதானப் போக்கையே வெளிப்படுத்துகிறது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் முதல் வெளிநாட்டுப் பயணம் கொழும்புக்கானதாக இருக்கும் என்று முதலில் இலங்கை அரசாங்கம் நம்பியது.

ஆனால், அவர் பூட்டானுக்கும் பிறேசிலுக்கும் சென்று வந்துவிட்டார். அடுத்து நேபாளத்துக்கும் சென்றிருக்கிறார். எனினும் இலங்கைப் பயணம் பற்றிய எந்த தகவலும் இல்லை. அதுபோலவே சுஸ்மா சுவராஜ் முதலில் இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பங்களாதேஸ், பூட்டான், நோபளம் என்று சென்றுவந்துவிட்ட அவர் அடுத்த மியான்மர் செல்லவுள்ள போதும் இலங்கையைக் கண்டுகொள்ளவில்லை.

நரேந்திர மோடியின் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டுமன்றி இலங்கை அரசாங்கத்தையும் கூட சற்று எட்டி வைத்தே கண்காணிக்கிறது.

இது இந்த விவகாரத்தில் இருந்துதான் ஒதுங்கி நிற்பதாக காட்டிக்கொள்வதற்காகவோ அல்லது சற்று ஒதுங்கி நின்று அவதானித்துவிட்டு ஒரு பெரும் பாய்ச்சலை நடத்துவதற்காகவா? பொறுத்திருந்து பார்க்கலாம்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர்களை தூண்டிவிடுகிறார் எஸ்.பி.

## ஜே.வி.பி.கடும் கண்டனம்

பல்கலைக்கழக மாணவர்கள் தவறாக வழி நடத்தப்பட்டு சதித் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க சுமத்தியுள்ள குற்றச்சாட்டை ஜே.வி.பி நிராகரித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களை தூண்டுவது ஜே.வி.பியோ வேறு எவருமோ அல்ல எஸ்.பி . திஸாநாயக்கவே தூண்டி வருகிறார் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

எஸ்.பி. திஸாநாயக்கவே மாணவர்களை தூண்டிவிட்டு வருகிறார் என்பதை முன்பள்ளிக்கு செல்லும் பிள்ளையிடம் கேட்டாலும் கூறும்.

முன்பள்ளி மாணவர்களுக்கு எஸ்.பி.திஸாநாயக்க யார் என்று தெரியாவிட்டாலும், தொலைக்காட்சியில் எஸ்.பி. திஸாநாயக்கவை காட்டுவார்கள்.

இவர்தான் பல்கலைக்கழக மாணவர்களை குழப்பி விடுகிறார் என்று அந்த பிள்ளைகள் கூறுவர். எஸ்.பி. திஸாநாயக்கவின் கருத்துக்களுக்கு பதிலளிப்பது, பெறுமதியான எமது நேரத்தை வீணடிப்பதாகவே நான் கருதுகிறேன் எனவும் சுனில் கந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ் மாணவர் ஒருவரை இனந்தெரியாதோர் தாக்கியுள்ளதாக ஜே.வி.பி மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சி என்பன குற்றம் சுமத்தியிருந்தன.

இந்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்திருந்த அமைச்சர் திஸாநாயக்க, மாணவரை வேறு எவரும் தாக்கவில்லை எனவும் அவர் தன்னை தானே வெட்டிக்கொண்டதாக கூறியிருந்தார்.

இவ்வாறான பொய்களை வெளியிட்டு ஜே.வி.பியும் முன்னிலை சோசலிசக் கட்சியும் மீண்டும் நாட்டிற்குள் மோதலை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன எனவும் அமைச்சர் குற்றம் சுமத்தியிருந்தார். (6)

## சட்ட மீறல் சம்பவங்கள் ஊவாவில் 13 ஆக உயர்வு

ஊவா மாகாண சபை தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து இதுவரை 13 தேர்தல் சட்ட மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து பண்டாரவளை, அப்புத்தளை, தியத்தலாவை, ஊவா, பரணகம பதுளை மஹியங்கன ஆகிய பிரதேசங்களில் தொடர்ச்சியாக தேர்தல் விதி முறைகளை மீறும் வகையில் ஊர்வலங்கள் நடத்தப்படுகின்றன.

பதுளை மாவட்டத்தில் 11 தேர்தல் விதி முறை மீறல் சம்பவங்களும் மொனராகலை மாவட்டத்தில் இரண்டு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (6)

## பொதுபலசேனாவிற்கு எதிராக அணி திரளும் அமைச்சர்கள்

பொதுபல சேனா அமைப்பிற்கு எதிராக அமைச்சர்கள் அணி திரள்வதற்கு தீர்மானித்துள்ளனர்.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரிற்கும் மீன்பிடி வள அமைச்சர் ராஜித சேனாரட்ன விற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இருவரும் ஒருவரை ஒருவர் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொதுபல சேனா அமைப்பு அமைச்சர் ராஜிதவிற்கு எதிராக சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களை முறியடிக்க அமைச்சர்கள் குழுவொன்று அணி திரண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைச்சர்கள் குழாம் அமைச்சர் ராஜிதவிற்கு பக்கபலமாக செயற்படத் தீர்மானித்துள்ளனர்.

ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு எதிராக இவ்வாறு சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்தை பலவீனப்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளதாகவும் இதனை ஓர் சூழ்ச்சித் திட்டமாக கருதப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த சூழ்ச்சியை முறியடிக்க அமைச்சர்கள் ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானித்துள்னர்.

எதிர்காலத்தில் இது தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளதாக அமைச்சர்கள் ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளனர். (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வுகளாக திருமதி விதுஷா கோபிகிருஷ்ணாவின் மாணவிகள் வழங்கவுள்ள வீணையிசையில் மிருதங்கம் எ.அனந்தகோபன் இசைக்கவுள்ளார்.

இசையரங்கில் பாடல் ஹம்சத்வனி சோமசுந்தரக் குருக்களும், வயலின் எ.ஜெயராமனும் மிருதங்கம் எம்.மாதவனும், முகர்சிங் எஸ்.செந்தூரனும் வழங்கவுள்ளார்.

### (இசைநிகழ்ச்சி)

நல்லூர் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேசு இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வாக அபிராமி திவாகரக் குருக்களினால் நடன சமர்ப்பணம் இடம்பெறவுள்ளது.

### (இசைப்பேருரை)

நல்லூர் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற கம்ராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லை குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி முத்தமிழருவி இசைக்கதாரத்தினம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் தாடகை வதம் எனும் தலைப்பிலான இசைப்பேருரை இடம் பெறவுள்ளது.


### (ஆன்மீக சொற்பொழிவு)

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வாக சைவப்புலவர் கு.பாலஷண்முகன் வழங்கும் சமய வழிபாடு எனும் விடயத்திலான சொற்பொழிவும், சண்டிலிப்பாய் சேக்கிழார் மன்ற அறநெறிப்பாடசாலை, இளவாலை ஒல்லுடை ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை, இளவாலை சித்திரமேழி ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை, வல்வெட்டித்துறை வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நல்லூரான் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வரும் தெய்வீக அரங்கின் வரிசையில் இன்று யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களின் இசை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் வ.வத்சாங்கீதவர்மாவின் தனி இசையும் மற்றும் ஏனைய மாணவர்களின் வில்லிசை நிகழ்வு, குழு இசை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன. (6)

# நல்லூரான் திருவடிக்கு இன்று பதினோராம் திருவிழா



## வெண்பா

நல்லூரின் கந்தா உனைநாடி வந்தவர்க்குப்
பொல்லாதன வெல்லாம் போகுமே-நில்லாது
துன்பங்கள் நீங்கும் சுகவாழ்வு கைகூடும்
இன்பங்கள் பொங்கும் இனிது

வைத்திய கலாநிதி சி.இராசரத்தினம்

## நல்லருள் தருவான் நல்லூர்க் கந்தன்

நெற்றி நேத்திரத்தில் நெருப்பாய்த் தோன்றி
நெடுபுகழ் சரவணப் பொய்கையுள் குளிர்ந்து
வெற்றித் தாமரை மலர்களில் தவழுந்து
நாற்றிசை போற்றுபவர் நாயகி அணைப்பில்
நல்லாரைக் காத்திடும் சண்முகன் ஆகி
வீற்றிட்ட பதியாழ் நல்லூர் தனைநாம்
வீழ்ந்து வணங்கி தினமும் தொழுவோம்

நயினையூர் நா.கீதாகிருஷ்ணன்

## வருவான் வடிவேலன் அருள்வான் நல்லூரில்

ஆனைமுகன் தம்பியே ஆறுமுகா!
ஆட்டிய வல்வினையை தீர்த்திடுவேல் முருகா
தமிழன் நெஞ்சில் தமிழ்த் தெய்வமென உதித்தாய்
ஆதிசிவன் நெற்றியில் பொறிகளாய் உருவெடுத்தாய்
என்றும் எமக்கு நல்லருள்தா நல்லூரானே
வருவாய் வடிவேலா அருள்வாய் நல்லூரில்

கி.சஞ்சீவன் (யா/ஆவரங்கால் மகா.வி)

## கங்குல் அகன்று ஒளி வீசிட

கொடிகள் அசைந்தாடின
பக்தர் வெள்ளம் அலை மோதின
அரோகரா சத்தம் காதினில் ஒலித்தன
கங்குல் அகன்று கதிரவன் ஒளி வீசின
நல்லூர் பதிதனிலே சாந்த சொருபியாய்
குடி கொண்டிட்டவடிவேலனாம்
அப்பன் முருகன் அருள் பெற்றிடவாரீர்

நடுப்பக்க நித்தி தாவடியூர்

## எமக்கருளுகின்றான்!

குன்று தோறாடும் குமரன்
கோடி இன்பம் யாம் பெறவே
நின்று நல்லையம்பதியில்
நித்தம் எமக்கருளுகின்றான்!

கலாஞானி கதிரேசு சிவலிங்கம்

## அள்ளி வரம் தரும் அருள்நேசன்

குட்டிப் பிரமன் தன்னை தட்டிச்சிறையிலிட்டு
முட்டி அசுரர் தலை வெட்டிப் பகைமுடித்த குமரேசா
வள்ளி தெய்வயானையுடன் புள்ளி மயிலேறி
வெள்ளி வேல் கையேந்தி அள்ளி வரம்தரும் அருள்நேசா

ஆர்.எஸ்.ஆனந்தன் தும்பளை

## கந்தனே காத்தருள்வாய்

அன்னை சக்தியிடம் சக்தி வேலை வாங்கிய
சக்திவேலனே! ஆதிசிவனுக்கு
அறிவு புகட்டிய ஆறுமுகனே!
குறவள்ளியை மணமுடிக்க
வேட்டுவ வேடம் தாங்கிய வேலவனே!
காத்தருள்வாய் நல்லூர் கந்தனே!!!

பாரதிதாசன் சத்யா அல்வாய் வடக்கு

## நல்லைக் கந்தன் தனிவெண்பா

ஆறுதலைக் கொண்டடியா ரஞ்சுதலை நீக்கிமன
வாறுதலைத் தந்தருளும் அருட்குமரன்-நீறுபட
அடியார் வினையகற்றி ஆலயநல்லூரிலிருந்து
படிவாக்கும் கந்தன் பதம்

கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் மோதிய படகுகள்

(பொற்பதி)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் இரண்டு படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி சேதமடைந்துள்ளதாக அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,


கடந்த வியாழக்கிழமை வெற்றிலைக்கேணி கடற்கரையில் இருந்து கடற்றொழில் நிமிர்த்தம் அதிகாலை 4 மணியளவில் புறப்பட்ட படகுடன் பருத்தித்துறை முனைப்பகுதியில் இருந்து தூண்டில் தொழிலுக்கு சென்றுவிட்டு கரை திரும்பிக்கொண்டிருந்த படகு வெற்றிலைக்கேணி துறையில் இருந்து புறப்பட்ட படகுடன் மோதியுள்ளது.

இதனால் வெற்றிலைக்கேணி துறையில் இருந்து புறப்பட்ட படகின் அணியப் பகுதியில் பாரிய வெடிப்பு ஏற்பட்டதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த படகு வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளியான கதிர்காமர் சேதுரஞ்சன் என்பவரது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

படகில் பயணித்த குறித்த மீனவர் படகிலிருந்து தூக்கி எறியப்பட்ட போதும் காயங்கள் ஏதுமின்றி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இதேவேளை கடலில் தூக்கி வீசப்பட்ட மீனவர் மீட்கப்பட்டு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என கடற்றொழிலாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (6-64)




# கைதான பல்கலைக்கழக தமிழ் மாணவனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தாக்குதலுக்குள்ளாகியுள்ள கிளிநொச்சி, முகமாலையைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் என்ற மாணவன் விடயத்தில் உரிய கவனம் செலுத்தப்பட்டு அவரை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அம்மாணவனின் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சுதர்சனின் பெற்றோருக்கும் அமைச்சருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, மேற்படி மாணவன் மீது குறித்த பல்கலைக்கழகத்தில் வைத்து இனந்தெரியாதோர் சிலர் தாக்குதல் நடத்தியிருந்த விடயம் தொடர்பில் அம்மாணவனின் பெற்றோரால் அமைச்சருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், அம்மாணவன் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவரை விடுவித்து தரவேண்டுமெனவும் பெற்றோர்கள், அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமைய குறித்த மாணவனை உரியவர்களுடன் கலந்துரையாடி விடுவித்து தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரால் உறுயளிக்கப்பட்டது.

சந்திரகுமார் சுதர்சன் மீதான தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் ஏனைய மாணவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உயர்கல்வியமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க ஆகியோரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)




## சுக வாழ்வும் மன ஆரோக்கியமும் கண்காட்சி நல்லூரில்

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக தியான நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுக வாழ்வும் மன ஆரோக்கியமும் என்ற தொனிப்பொருளில் கண்காட்சி நல்லூர் உற்சவ காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய இம்முறையும் நேற்று 10 ஆம் திகதி ஆரம்பமான இக்கண்காட்சி இன்று 11 ஆம் திகதி திங்கட்கிழமையும் நாளை 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பருத்தித்துறை நல்லூர் முன் வீதி 2 ஆவது பந்தலுக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சி மூலம் மனம் வலுவூட்டப்படுவதுடன் சந்தோசமான சுகமான ஆரோக்கிய வாழ்வை அனைவரும் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே அனைவரையும் தவறாது பங்கு கொள்ளுமாறு பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய தகவல் தொடர்பு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.(6)

## பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சொல்வேந்தர் பொன் சுகந்தன் தலைமையிலான சிறப்பு பட்டிமன்றம் இன்று இரவு 8.30 மணியளவில் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய பூங்காவன உற்சவத்தின்சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது.

இன்றைய குடும்பங்கள் சிரித்து வாழ்கின்றனரா? அல்லது பிறர் சிரிக்க வாழ்கின்றனரா? என்ற தலையங்கத்தில் இடம்பெறவுள்ளது. (6)





நல்லூர் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண பண்பாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வரும் தெய்வீக அரங்கில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்வும் குறவன், குறத்தி நாட்டிய நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. (படங்கள்:-என்.குமார்)

# இரண்டு வாரங்களுக்குள் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

## மாகாணசபை உறுப்பினர் உறுதி

ஊர்காவற்றுறை பிரதேச மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு இருவார காலத்துக்குள் வடக்கு மாகாண சபையூடாக தற்காலிகமாகத் தீர்வு ஏற்படுத்தப்படும் என வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களுக்கு விஜயம் செய்து மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் மக்கள் சந்திப்புக்களை மேற்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தீவகத்தில் நிலவும் கடும் வரட்சி தொடர்பாக தம்பாட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தின் தலைவர் ஐ.சிவநேசபிள்ளை தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி தமது குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு வடமாகாணசபை ஊடாக தற்காலிகமானதும், உடனடியானதுமான தீர்வைப் பெற்றுத்தரக் கோரினர்.

இதற்குப் பதிலளித்த வடமாகாணசபை உறுப்பினர் தீவகத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினையில் வடமாகாணசபை மிகுந்த கரிசனை கொண்டுள்ளதாகவும், இன்னும் இரண்டு வாரகாலத்துக்குள் வடக்கு மாகாண சபையில் நீர் விடயங்களுக்கு பொறுப்பாகவுள்ள விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஊடாக தீவகப் பகுதிக்கென இரண்டு தண்ணீர் பவுசர்கள் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது நிலவும் குடிநீர் பிரச்சினைகளை தற்காலிகமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக உறுதியளித்தார்.

மேலும் இதன்மூலம் ஓரளவு குடிதண்ணீப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என நம்பிக்கை தெரிவித்ததோடு தீவகத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண வேண்டுமானால் இங்குள்ள நன்னீர்க்குளங்களைப் புனரமைத்து பாரிய நீர்த்தேக்கங்களை உருவாக்குவதன்மூலம் நன்னீர் ஊற்றுக்களை உருவாக்க முடியும் எனவும் இது தொடர்பான செயற்றிட்டத்துக்கு எதிர்காலத்தில் வடமாகாணசபை ஊடாக முயற்சி எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். இந்தச் சந்திப்புக்களின் போது மக்களுடன் சென்று பிரதேசத்தில் உள்ள வரட்சியால் காய்ந்துபோன குளங்களையும், கிணறுகளையும் பார்வையிட்டார்.

இச்சந்திப்பில் சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம், மாதர் அபிவிருத்திச் சங்கம், முன்பள்ளி, ஆலயங்கள், கடற்றொழில் கிராமிய அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். (6)

# தமிழர் சரித்திரம் படைக்க வேண்டும்

## கோப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களை நாம் பேணி சிக்கனமாக சேமிப்பை நடத்தி சந்ததி சிறக்க சரித்திரம் படைக்க வேண்டும் என கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச கலாசாரப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட திருநெல்வேலி ஆசிரிய வாண்மைத்துவ நிறுவன ஆற்றுகை குழுவினரால் நடத்தப்பட்ட **மாறுவோம் மாற்றுவோம்** எனும் வீதி நாடகம் அண்மையில் கோப்பாய் மத்தியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடும்பத்தில் உள்ள வன்முறைகளை இல்லாதொழிக்க வேண்டும். அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து அவர்களை பாதுகாத்து பலம் பொருந்திய சமூகமாக மிளிர செய்ய வேண்டும்.

எமது எதிர்கால சந்ததிகளான இம் மாணவர்களுக்கு நல்ல கல்வியை கற்க வழிசெய்வதுடன் நல்ல ஒழுக்க விழுமியங்களை கற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச கலாசார அலுவலர் திருமதி மிலாசினி றோகேசன், கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பாலச்சந்திரன், கிராம அபிவிருத்தி உதவியாளர் வித்தியா மற்றும் ஆசிரிய வாண்மைத்துவ நிறுவனப் பணிப்பாளர் பா.தனபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம் சிவ ஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்

## றப்புமலர்

யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவால் வழங்கப்படும் யாழ். விருது -2014 சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய தலைவரும் சித்தன்கேணி சிவன்தேவஸ்தான குருவுமாகிய வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் அவர்களுக்கு இன்று 11.08.2014 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.



செயற்பாடுகளை ஆற்றினார். ஆன்மீகப் போட்டிப் பரீட்சைகளை நடத்துதல், நடனம், சங்கீதம், வீணை, வயலின், மிருதங்கம் போன்ற கலைகள் சம்பந்தமான போட்டிகளை நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களை கௌரவப்படுத்தினார்.

மேலும் ஆலயங்களில் நடைபெறுகின்ற விழாக்கள், நித்திய கிரியைகள், பூசைகள், விரதங்கள் போன்றவற்றின் தாற்பரியங்களைக் கூறியும் வருபவர். ஆலயங்களில் நடைபெறுகின்ற கிரியைகளுக்கு விளக்கங்களும் அதன் முக்கியத்துவம் பற்றியும் அடியார்களுக்கு எடுத்துக் கூறுவதோடு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றி வருகின்றார்.

இவர் தனது பேரனார், பேர்த்தியார் ஞாபகார்த்தமாக "ஞானரத்தினம்" என்ற பெயருடன் ஒரு ஆன்மீக அமைப்பை தனது சகோதரனாகிய பிரம்மஸ்ரீ உமாபதிசர்மாவுடன் ஆரம்பித்து பல விடயங்களை ஆற்றி வருகின்றார். இவருடன் குடும்பத்தவரும் பங்காற்றி வருகின்றனர். இவரின் தந்தையார் பிரம்மஸ்ரீ.சபாரத்தினசர்மா அவர்களின் ஆலோசனைக்கமைய ஏழை மாணவர்களுக்கு உதவுதல், உணவு வழங்கல், உடை வழங்கல், கல்வி பயில்வதற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் போன்றவற்றைச் செய்து வருகின்றார். மேலும் பல ஆலயங்களில் சொற்பொழிவுகளை மேற்கொண்டு வருகின்றார். ஞானரத்தின வெளியீடாக வெளிவந்த பைரவ கீதங்கள் இறுவெட்டுக்கு பாடல் வரிகளை எழுதியமை, விரதமஞ்சரி காணொளியை வெளியீடு செய்தமை குறிப்பிடத்தக்கன. அர்த்தமுள்ள விவாகம், வாழ்வியற் கிரியைகள், நலம் தரும் சனீஸ்வரன், சூரிய ஆராதனை, குரு ஆராதனை, பிரதோஷ விரதம், இராகுகால துர்க்காபூஜை, ஆலயம் தொழுவது சாலவும் நன்று, தீட்சா மஞ்சரி (வடமொழி) ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

2003 ஆம் ஆண்டு ஆச்சார்யாபிஷேகம் என்னும் குருப்பட்டத்தினை சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் மூலம் பெற்றார். அதன் பின் மகோற்சவங்கள், விவாக நிகழ்வுகள், கும்பாபிஷேகங்கள் என்பவற்றை நிகழ்த்தி வருகின்றார். முதன்முதலாக சித்தன்கேணி சிவன் ஆலயத்தில் 33 குண்ட மகா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தினார். யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கொழும்பு, வன்னி, மலைநாடு போன்ற இடங்களிலும் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, சுவிஸ் போன்ற வெளிநாடுகளிலும் கிரியைகளை ஆற்றி வருகின்றார்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்திற்கு 2010 ஆம் ஆண்டு தலைவராகத் தெரிவானார். அந்தணர்களுக்குரிய இவ்வமைப்பின் மூலமாக எழுத்தாளர் அவை, ப்ரம்ம கானசபா, ஸ்ரீமாதா மாதர் அபிவிருத்திச் சங்கம், முதியோர் நலன் பேணும் ஆனந்த பவனம் என பல குழுக்களை செயலாளர் மற்றும் உறுப்பினர்களது ஒத்துழைப் புக்களுடனும் மூத்த குருமார்களின் வழிகாட்டலுடனும் அமைத்து சமூக மேம்பாட்டிற்காக சேவைகளை ஆற்றி வருகின்றார்.

மாணவர்களது சமயப்பற்று, ஒழுக்கநெறி மேம்பாடடைய வட்டு இந்துக்கல்லூரி, விக்ரோறியா கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம் என பல கல்லூரிகளில் கருத்தரங்குகள் சொற்பொழிவுகளை நடத்தி வருகின்றார். சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களுக்கும் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய வலயங்களுக்குட்பட்ட சமய பாட ஆசிரியர்களுக்கு கருத்துரை வழங்கியமை. அவ்வப்போது நோயாளர்கள் நலம் வேண்டியும் முதியோர் நலம் வேண்டியும் பிரார்த்தனை நிகழ்வுகள் ஏற்பாடு செய்து அவற்றை சிறப்புற நிறைவேற்றியுள்ளார்.


அந்தண மூத்த சிவாச்சாரியர்களை கௌரவித்தல், சிவானந்தம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருப்பதுடன், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அந்தண மாணவர்களின் அந்தண கலாசார மேம்பாட்டிற்காக அந்தண பண்பாட்டு கல்வி வகுப்பு நடத்தியமை, சிறப்பாக காலத்தின், சமூகத்தின் தேவை களுக்கமைவாக வாழ்த்துகள், கருத்துரைகள் வெளியிட்டு வருவதும் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க பிரசார நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். ஓம் நமசிவாய பிரார்த்தனை நிகழ்வின் மூலமாக இளையோர் மத்தியில் சமயப்பற்றினை வலுச்சேர்க்கும் வகையில் விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் வண்ணார்பண்ணைச் சிவன் ஆலயத்தில் இருந்து கீரிமலை நகுலேஸ்வரம் வரை ஆன்மீக பாத யாத்திரை நடத்தியமை விசேட அம்சமாகும்.

அத்துடன் சைவ ஆலயங்களிற்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆலோசனை, கருத்துரை வழங்கு வதற்காக மாவட்டச் செயலகத்தால் நியமிக் கப்பட்டுள்ளார். மேலும் வலி. மேற்கு பிரதேச சபை, ஸ்ரீ கணேச வித்தியாலயம், வட்டு இந்துக் கல்லூரி, சுப்றா கல்வி நிறுவனம், வட்டு பொலிஸ் நிலையம், சுங்கானை சுகாதார பணிமனை ஆகியவற்றின் ஆலோசனை உறுப்பினராக இருந்து பணியாற்றி வருகின்றார்.

இத்தகைய சிறப்புமிகு சேவையாற்றிவரும் வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்களுக்கு 2014 ஆம் ஆண்டின் யாழ் விருது கிடைப்பதையிட்டு சைவசமய விவகாரக்குழு மனமகிழ்வடைகிறது.

**பு.ஆறுமுகதாசன், செயலாளர், சைவ சமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

### யாழ். மாநகர சபை ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி



சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவரும் சித்தன்கேணி சிவன் ஆலய பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் அவர்களுக்கு இந்த ஆண்டிற்கான யாழ். விருது கிடைப்பதை இட்டு பேருவகை அடைகின்றேன்.

யாழ்ப்பாண மாநகர சபை சைவ சமய விவகார குழுவினால் வழங்கப்படும் யாழ். விருது எனும் உயரிய கௌரவம் சமய , சமூக சேவையை கௌரவிக்கும் பொருட்டு வழங்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான யாழ். விருது சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தை நேரிய பாதையில் வழிநடத்திச் செல்கின்ற- புதிய சிந்தனையோடு சைவ சமய பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வரும் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் அவர்களுக்கு கிடைப்பதை இட்டு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு அவரின் பணி மென்மேலும் தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**செ.பிரணவநாதன், ஆணையாளர், யாழ். மாநகர சபை.**
**தலைவர், சைவசமய விவகாரக் குழு.**

### வாழ்த்துரை வழங்கிய அரசியல் பிரமுகர்கள்



டக்ளஸ் தேவானந்தாபாரம்பரிய கைத்தொழில் கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்



திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா - யாழ். மாநகர முதல்வர்



திருமதி. நாகரஞ்சனி ஐங்கரன், தவிசாளர் வலி.மேற்குப் பிரதேசசபை.

## ...ந்தகைகள்



திரு. தனஞ்சயன், அதிபர் வட்டு இந்துக் கல்லூரி



Dr.சச்சிதானந்தராஜா- சித்தன்கேணி



திரு. கைலாசநாதன்- பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம்



திரு. ஞானேஸ்வரன் பொறியியலாளர், வட்டுக்கோட்டை



திரு. தி.ராஜ்குமார், தலைவர் சிவன்தேவஸ்தான பரிபாலனசபை

ரின்டேர்ஸ்
நவீன அச்சுத்துறையின் முன்னோடி
www.harikanan.com,
Print@harikanan.com
harikanan.print,
Harikanan.Printers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா மீது இஸ்ரேல் விமானங்கள் நேற்றும் குண்டு மழை பொழிந்தன

(காஸா)

இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையிலான 72 மணி நேர தற்காலிக போர்நிறுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து, இஸ்ரேல் மீது முதலில் ஹமாஸ் படையினர் ரொக்கெட்களை வீசி தாக்குதல் நடத்தினர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் காஸா பகுதியின் மீது நேற்று 51 முறை பறந்த இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 10 வயது சிறுவன் உட்பட 6 பேர் பலியாகினர். 31 பேர் படுகாயமடைந்தனர்.

இரண்டாவது நாளாக நேற்றும் காஸா பகுதியில் தாழ்வாக பறந்த இஸ்ரேல் போர் விமானங்கள் அங்குள்ள முக்கிய தலைவர்களின் பதுங்குமிடங்கள், ஆயுத கிடங்கு ஆகியவற்றின் மீது குண்டு மழை பொழிந்து தாக்குதல் நடத்தியதில் ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய அலுவலர் மோவாஸ் ஸயித் உட்பட 5 பேர் பலியாகினர்.



**காஸா பகுதி மீது கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் சுமார் ஆயிரத்து 900 பாலஸ்தீனியர்களும், 67 இஸ்ரேலியர்களும் பலியாகியுள்ளனர். பலியான ஆயிரத்து 900 பேரில் 429 அப்பாவி குழந்தைகள் மற்றும் ஆயிரத்து 354 பேர் பெண்கள் உள்ளிட்ட சாதாரண பொது மக்கள் என்று ஐ.நா. சபை கணக்கிட்டுள்ளது.**

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 3 மசூதிகள் தரைமட்டமாகி விட்டதாகவும், இதுவரை சுமார் 150 மசூதிகளை இஸ்ரேல் விமானப் படையினர் குண்டு வீசி தகர்த்துளளதாகவும் பாலஸ்தீன வானொலி செய்திகள் குறிப்பிடுகின்றன.

இதற்கிடையில், இஸ்ரேலுடன் இனி சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இறுதி வரை போராடுவது என்று ஹமாஸ் இயக்கம் முடிவெடுத்துள்ளதாக அவ்வியக்கத்தின் செய்தி தொடர்பாளர் பவுஸி பர்ஹூம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (6)

# 24 மணிநேர அவசர உதவிமையம் திறப்பு


எபோலா காய்ச்சல் எனப்படும் வைரஸ் நோய் ஆபிரிக்க நாடுகளான நைஜீரியா, லைபீரியா, சியானா, சையர், லியோன் ஆகிய 4 நாடுகளில் தற்போது மிக வேகமாக பரவி வருகிறது.

இந்த காய்ச்சலுக்கு இதுவரை சுமார் ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். எப்ோலா காய்ச்சல் அறிகுறிகளுடன் ஆயிரக்கணக்கானவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எப்ோலா காய்ச்சல் உலகம் முழுவதும் பரவக்கூடும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து, துரிதமாக செயற்பட்ட மத்திய சுகாதார அமைச்சகம் 24 மணி நேர அவசர உதவி மையத்தை அமைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த உதவி மையத்தின் அவசர அழைப்பு தொலைபேசி எண்கள் 011-23061469, 3205 மற்றும் 1302 என்று அறிவித்த மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்த்தன், 'எபோலா காய்ச்சல் பற்றி மக்கள் பீதியடைய தேவை இல்லை, இது தொடர்பாக, தொடர்ந்து கண்காணிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.



எபோலா அறிகுறிகளால் பாதிக்கப்படும் டில்லிவாசிகளுக்கு சிகிச்சை அளிக்க டில்லியில் உள்ள ராம் மனோகர் லோகியா வைத்திய சாலை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார். (6)

# 270 இந்தியர்கள் மீட்பு

ஈராக்கில் சிக்கித் தவித்த இந்திய தாதிகள் ஒருவழியாக கடந்த மாதம் பத்திரமாக தாய்நாடு திரும்பிய நிலையில், தற்போது உள்நாட்டு மோதலால் திணறி வரும் லிபியாவில் பணியாற்றும் இந்தியர்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்திய மத்திய அரசு, அவர்களை பத்திரமாக தாய்நாட்டுக்கு அழைத்து வர இந்திய வெளியுறவு துறை அமைச்சகம் மூலமாக தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதில் முதற்கட்டமாக லிபியா தலைநகர் டிரிபோலியில் உள்ள வைத்தியசாலையில் பணியாற்றி வந்த இந்திய தாதிகள் தாய்நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர் களை தவிர லிபியாவின் ஏனைய வைத்தியசாலை மற்றும் கல்விக் கூடங்களில் சுமார் 6 ஆயிரம் இந்தியர்கள் தற்போது வேலை செய்து வருகின்றனர்.

அங்குள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தலையீட்டின் பேரில் இவர்களில் 270 இந்தியர்கள் லிபியாவின் பென்காசி நகரில் இருந்து கப்பல் மூலம் மால்டா நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கிருந்து சிறப்பு விமானம் மூலம் அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இதற்கிடையில், லிபியா போராளிகளால் மொசூல் நகரில் கடத்தப்பட்ட 39 இந்தியர்களை பத்திரமாக மீட்கும் நடவடிக்கையிலும் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளும், லிபியாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# சீனாவில் மலையில் தடம்புரண்ட பேருந்து பள்ளத்தில் பாய்ந்தது

## 44 பேர் பலி; 11 பேருக்கு காயம்!



சீனாவின் அன்ஹுயி, ஷங்காய், ஷாண்டாங் மற்றும் ஹெபேய மாகாணங்களை சேர்ந்த சுமார் 50 பேர் தன்னாட்சி அதிகாரம் படைத்த திபெத் நாட்டில் உள்ள பிரபல சுற்றுலா தலங்களை பார்ப்பதற்காக ஒரு தனியார் பேருந்தில் நேற்று முன்தினம் சென்றனர்.

உள்ளூர் நேரப்படி மாலை 4.45 மணியளவில் லாஸா நகரின் அருகிலுள்ள நெய்மோ பகுதியின் மலை முகடு வழியாக வந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, எதிரே வந்த ஒரு கார் மற்றும் ஒரு லொறி மீது மோதியதில் நிலைகுலைந்து, மலை முகட்டில் இருந்து சுமார் 10 மீற்றருக்கும் அதிகமான ஆழத்தில் உள்ள பள்ளத்தில் பாய்ந்தது.

இந்த கோர விபத்தில் பேருந்தில் பயணித்தவர்கள், விபத்துக்குள்ளான காரில் இருந்தவர்கள் என 44 பேர் பலியானதாகவும், 11 பேர் காயமடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (6)

# தமிழக மீனவர்களுக்கு ஆயுதம் வழங்குங்கள்

## பழ.நெடுமாறன் கோரிக்கை

தமிழக மீனவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டுமென தமிழக அரசியல்வாதி பழ.நெடுமாறன் கோரியுள்ளார்.

இந்திய கடற்படையினர் உரிய முறையில் தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கத் தவறினால், ஆயுதங்களையேனும் வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடலில் இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை முறியடிப்பதற்கு, தமிழக மீனவர்களுக்கு மத்திய அரசாங்கம் ஆயுத பயிற்சி அளிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவை மீளவும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கச்சதீவை இலங்கைக்கு வழங்கிய போது ஆட்சியிலிருந்த மத்திய அரசாங்கம், பாராளுமன்றின் அனு [illegible] (6)

# விமான விபத்து; 40 பேர் உயிரிழப்பு



ஈரானின் தலைநகரான டெஹ்ரானில் உள்ள விமான நிலையத்துக்கு அருகில் சிறிய ரக பயணிகள் விமானம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை விபத்துக்கு உள்ளானதால் 40 இற்கும் அதிகமானோர் மரணமடைந்துள்ளதாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு நகரமான தபாஸ் நோககி குறித்த விமானம் பயணித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் பாரிய விமான விபத்துக்களை எதிர்நோக்குகின்றது. பழைய விமானங்களும் பராமரிப்பு இன்மையுமே இவ்வாறான விபத்துக்களுக்கு காரணமாக அமைவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஈரானில் கடந்த 25 வருடங்களில் 200 இற்கும் அதிகமான விமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன், இதனால் 2 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மரண மடைந்துள்ளதாகவும் அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் ஆளவேண்டும் என்பதல்ல பிரச்சினை.
அது எப்படி ஆளவேண்டும் என்பதுதான்.
–காமராஜர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மன்னர்க்கு சிலை நிறுவிய இராஜதந்திரத்தை வரவேற்போம்

மலையக மக்களின் தலைவராக இருந்த சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் முக்கியமானதொரு இடமுண்டு. நாடற்றவர்களாக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களை இலங்கை நாட்டின் பிரஜைகள் ஆக்குவதிலும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் தொண்டைமானின் அரசியல் இராஜதந்திரம் மதிப்பிடற்கரியது.

இந்த நாட்டின் ஆளும் தரப்பில் யார் இருந்தாலும் அவர்களுக்கு ஆதரவளித்துக் கொண்டு பொறுப்பான அமைச்சுப் பதவியை வகிப்பதுடன் மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் தொண்டமான் மிகப் பெரிய சாதனை படைத்தார்.

தொண்டமானின் அரசியல் இராஜதந்திரம் கண்டு அஞ்சிய சிங்களத் தலைவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

மலையக மக்களின் தலைவர் தொண்டமானின் இந்த இராஜதந்திரம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவசியமானது.

தமிழர்களுக்கு இரண்டு அரசியல் தலைமைகள் இருக்க முடியும். அதில் ஒன்று, தனித்துவமான அரசியல் தலைமை. மற்றையது ஆளுந் தரப்புக்களுடன் பேரம் பேசும் உறவுடனான அரசியல் தலைமை.

தனித்துவமான தமிழ்த் தலைமை உரிமைக்காகக் குரல் கொடுப்பதுடன் பிராந்திய வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கையினை முன்னெடுப்பது.

ஆளும் தரப்புடன் இணைந்து செல்லும் தமிழ் அரசியல் தலைமை மத்திய அரசின் வள ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி தமிழ்ப் பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்னெடுத்தல் வேண்டும்.

இந்த இரண்டு அணுகுமுறைகளின் ஊடாக, தமிழ் அரசியல் நகர்த்தப்படுவது புத்திசாலித்தனமானது. அதேநேரம் இரண்டு தமிழ் அரசியல் தலைமைகளிடமும் நாம் தமிழர் என்ற இன உணர்வுடன் கூடிய ஒற்றுமை வலுவாக இருப்பது அவசியமாகும்.

இந்த அணுகுமுறையின் ஊடாகவே எங்களின் அரசியல் இராஜதந்திரத்தை நகர்த்த முடியும்–நகர்த்த வேண்டும்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுர சதுக்கத்தில் எல்லாளன், பண்டாரவன்னியன், பரராஜசேகரன் ஆகிய மூன்று மன்னர்களின் உருவச்சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தூர நோக்கில் யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவின் முயற்சியினால் இச் சிலைகள் நிறுவப்பட்டமை பாராட்டுக்குரியது.

இன்றைய சமகாலத்தில் குறைகள் கூறுவதை விடுத்து எதை எதை நாம் செய்ய முடியுமோ அவற்றைக் காலம் தாமதியாமல் செய்வதே தமிழ் இனத்திற்கு நாம் செய்யக் கூடிய பெரும் தொண்டாகும்.

அந்த வகையில் எங்கள் மண்ணில் எங்கள் மன்னர்களுக்கு சிலை எடுத்தமை காலம் உணர்ந்த மிகப் பெரும் இராஜதந்திரம். இந்தப் பணியை எதிர்ப்பின்றிச் செய்வதென்பது மிகவும் புத்திசாலித்தனமானது.

தமிழர் தரப்பு எதைச் செய்தாலும் அது தொடர்பில் கண்ணும் கருத்துமாக இருக்கக் கூடிய சமகாலச் சூழ்நிலையில், தமிழ் மன்னர்கள் மூவரின் சிலைகளை பொருத்தமான இடத்தில் அமைத்து இது தமிழர்களின் தாயகம் என்பதை அடையாளப்படுத்தியமைக்குள் இருக்கக் கூடிய இராஜதந்திரம் மிகவும் பெறுமதியானது.

இது போன்ற இராஜதந்திரமே தமிழர்களுக்கு இப்போதைய தேவை என்பதால், இத்தகைய பணிகள் மிக வேகமாக நடந்தேற வேண்டும். எல்லோரும் இணைந்தால் எதுவும் சாத்தியமாகும்.

## ஓமந்தை சோதனைச்சாவடிக்கு சென்ற மகளைக் காணவில்லை

(மன்னார்)

ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து தனது மகள் காணாமல் போயுள்ளதாக இலுப்பைக்கடவையினைச் சேர்ந்த பூபாலசிங்கம் ரஞ்சிதமலர் என்ற தாய் நேற்று முன்தினம் சனிக்கிழமை, மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவிக்கையில்,

எனது மகளான பூபாலசிங்கம் நிரஞ்சினிக்கு அப்போது 18 வயதாகும். உயர்தரம் படித்துக்கொண்டிருந்த போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்த போது கடந்த 19.03.2009 அன்று ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் காணாமல் போனார.

தற்போது எனது மகள் எங்கே இருக்கின்றாள் என்ற விடயம் எனக்குத் தெரியாது. இராணுவ கட்டுப்பாட்டு பகுதியான ஓமந்தை சோதனைச் சாவடிக்கு வந்த பிள்ளை எப்படி காணாமல் போனாள என்று தெரியவில்லை என அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார். (6)

# தரம் 5 புலமைப்பரிசில் வகுப்புக்களுக்கு தடை

(கொழும்பு)

இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இன்று முதல் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம். என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று நள்ளிரவு 12 மணி தொடக்கம் ஐந்தாமாண்டு புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறும் தினமான எதிர் வரும் 17 ஆம் திகதி வரையான காலப பகுதிக்குள் பரீட்சார்த்திகளுக்காக வகுப்புகளை ஏற்பாடு செய்தல் , செயலமர்வுகள் நடத்துதல், எதிர்பார்க்கப் படும் வினாத்தாள்கள் அச்சிடல் சுவரொட்டிகள், பிரசுரங்களை ஊடகங்கள் வாயிலாக வெளியிடல் என்பன 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுத்தேர்வுகள் சட்டத்தின் 22ஆம் பந்தியின் கீழ் முற்றாக தடை செய்யப் பட்டுள்ளது.

இவ்வொழுங்கு விதியை கருத்திற் கொள்ளாது செயற்படும் யாதேனுமொருவர் பிரிவினர் அல்லது நிறுவனம் இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்தவராக கருதப்படுவர்.

எனவே இவ்வொழுங்கு விதியினை மீறுவோர் குறித்து அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையலுவலகம் அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களம் என்பவற்றுக்கு அறியத்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு பெறுபேற்றுக் கிளை 0112784208, 0112784537 உடனடி அழைப்பு எண் (பரீட்சைத் திணைக்களம்) 1911 பொலிஸ் தலைமையகம் 011 2421111 அவசர அழைப்பு 119 ஆகிய இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (6)

## நிர்வாக சபைத் தெரிவு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக சீ.லிங்கேஸ்வரனும் செயலாளராக செ.யூதாதேயூவும் பொருளாளராக ச.பொன்னையாவும் உப தலைவராக அ.லூசியஸ் நொளாஸ்கோவும் உப செயலாளராக தி.இராஜ நிரஞ்சனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நிர்வாகிகள் தெரிவில் இடம் பெறுவதற்காக இச்சங்கத்திலிருந்து வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் உட்பட ஐவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-64)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**11.08.2014 இற்கான வினா**

பஜனை என்றால் என்ன?

**10.08.2014 ற்குரிய கேள்வியும் விடையும்**

**ஆலயம் ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் அதன் பணிகள் யாவை?**

- வறியவர்களுக்கு உதவி செய்தல்
- ஆதரவற்றோரை (குழந்தைகள், முதியோரை) பராமரித்தல்
- குருக்கள் சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளை ஆராய்ந்து, அவற்றை இறைவன் சந்நிதியில் தீர்த்து வைத்தல்
- வெள்ளிக்கிழமை மாலை நேரங்களில் பண்ணிசை, பஜனை ஆகியவற்றை நடத்துதல்
- ஞாயிற்றுக்கிழமை காலை நேரங்களில் அறநெறி, கலை வகுப்புக்களை நடத்துதல்

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வாழ்நாள் பேராசிரியர் நந்தியின் 49 சிறு கதைகள் அடங்கிய நந்தியின் சிறுகதைகள் நூல் வெளியீடு இன்று திங்கட்கிழமை இரவு 7.00 மணிக்கு நல்லூர் குறுக்குத்தெரு பாணான் குளத்தடியிலுள்ள திறந்தவெளி அரங்கில் இடம் பெறவுள்ளது.

பேராசிரியர் நந்தி அறக்கட்டளையினால் இந் நூல் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது. (எ-6)

# ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு கடுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சு கடுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அதிருப்தி அளிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் இந்திய பிரதமருக்கு எதிராக கட்டுரை வெளியிடப்பட்டு அதன் பின்னர் மன்னிப்பு கோரியமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது. இலங்கை வெளிவிவகார அமைச்சின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என சுட்டிக்காட்டியுள்ளது. (எ-6)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அறிவு, உடல் ஆற்றல்களைப் பயன்படுத்தல்



பயங்கரமான வேகம் கொண்டு பாயும் நதியின் வெள்ளத்தை அணைகள் மூலம் தடுத்து ஒரு தக்க இடத்தில் தேக்கி அந்தத் தண்ணீரை நமக்குவேண்டிய இடத்திலும் நமக்குவேண்டிய அளவிலும் உபயோகித்துப் பயன்பெறுகிறோம். புலன்கள், உடற்கருவிகள், அறிவின் ஆற்றல் என்ற இவற்றில் சிறந்த மனிதர்களின் உடற்பலமும் அறிவின் நுட்பமும் இக் காலத்தில் கவலையில்லாது ஓடிப்பாயும் வெள்ளம்போல் பல்வேறு துறைகளில் அழிவைச் செய்து விடுகிறது.

அவைகள் அவ்வாறு செய்யாது வாழ்க்கைத் துறைகளாகிய மனோதத்துவம், சுகாதாரம், பொருளாதாரம், அரசியல்,விஞ்ஞானம் என்ற ஐந்து துறைகளிலும் நன்றாகப் பயன்படும்படி செய்து அப்பயன்களின் உதவியால் உலக மக்கள், அனைவரையும் நீதி, அன்பு, அமைதி, இன்பம் என்னும் குறிக்கோளுடன் வாழச்செய்ய முயற்சி செய்வோம்.

**மனோதத்துவம் என்றால் என்ன?**

உடலில் அருபமாய் நல்லது கெட்டது, இன்பம்-துன்பம், உயர்வு-தாழ்வு, விருப்பு-வெறுப்பு என்பன உணர்ச்சிகளாய் மனத்திலே எழுகின்றன. அறிவின் பண்பாட்டினால் இவையனைத்தும் கடந்த நடுவுநிலைமையும் அந்த மனத்திலேதான் ஏற்படுகின்றது.

கடந்தகால, எதிர்கால சம்பவங்களை யூகித்துப்பார்த்து அறிவின் இயல்பு, இருப்பிடம், இயக்கம் என்பனவற்றை நன்றாய் உணர்ந்து, அறிவின் மூலமும் முடிவும் அதன் இயல்பினையும் செவ்வனே உணர்ந்து வளர்த்துப் பண்படுத்தும் கலைதான் மனோதத்துவம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தேம்பித் தேம்பி அழுத சச்சின்




பாகிஸ்தானில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளை டிரா செய்திருந்தாலும் ஒருநாள் போட்டிகளில் இந்தியாவை பாகிஸ்தான் வென்றிருந்தது. எனவே தோல்வி முகத்துடன் இந்திய அணி இந்தியா திரும்பியது. பாகிஸ்தானில் நடைபெற்ற டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அணியின் கேப்டனும் அதிரடி நாயகனுமான ஸ்ரீகாந்த் எதிர்பார்த்த அளவு சரியாக விளையாடவில்லை. போதாக்குறைக்கு சம்பள விடயத்திலும் கிரிக்கெட் வாரியத்துக்கு எதிராக அவர் தனது அணி வீரர்களுக்காகப் பரிந்து பேசியிருந்தார். இதை எல்லாம் கூட்டிக்கழித்துக் கணக்குப் பார்த்த கிரிக்கெட் வாரியும் வழக்கம் போல் தன்னுடன் ஒத்துப்போகாத ஸ்ரீகாந்தை கழற்றிவிடத் தீர்மானித்தது. 1990 ஜனவரி மாதம் நியூசிலா



ந்து நாட்டிற்குச் செல்ல வீரர்களின் தேர்வு நடந்தபோது ஸ்ரீகாந்த் அணித் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு அவருக்குப் பதிலாக அணித் தலைவராக அசாருதீன் பொறுப்பேற்றுக் கொண்டார். அணியின் பயிற்சியாளராக இருந்த சந்து போர்டேவும் நீக்கப்பட்டு அவருக்குப் பதில் சுழற் பந்து வீச்சாளரான பிஷன்சிங் பேடி நியமிக்கப்பட்டார்.

முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்பாக நடைபெற்ற இரண்டு காட்சி விளையாட்டுக்களில் சச்சின்; 13,47,4 மற்றும் 30 ரன்களை எடுத்திருந்தான். இவற்றைத் தொடர்ந்து நியூசிலாந்து பிரெசிடெண்ட் XI அணிக்கு எதிராக நடைபெற்ற முதல்தர மேட் சில் சச்சின் தனது ஆயிரமாவது ரன்னை எட்டினான். உலகிலேயே மிகக் குறைந்த வயதில் முதல்தர போட்டிகளில் ஆயிரம் ரன் எடுத்த பெருமையும் சச்சினை வந்தடைந்தது.

கிரைஸ்ட்சார்ச்சில் முதல் போட்டி தொடங்கியது. சச்சின் முதல் பந்திலேயே ரன் ஏதும் எடுக்காமல் பூஜ்யத்தில் ஆட்டம் இழந்தான். கபில்தேவ் தவிர வேறு யாருக்கும் நியூசிலாந்தில் ஆடி அனுபவம் இல்லை. இந்தியா 164 ரன்களுக்கு ஆட்டம் இழக்க நியூசிலாந்து 459 ரன்களைக் குவித்தது. இந்தியா இரண்டாவது இன்னிங்சில் 266 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. நியூசிலாந்து பத்து விக்கெட் வித்தியாசத்தில் மிகச் சுலபமாக இந்தியாவை வீழ்த்தியது. இந்த மேட்சில்தான் நியூசிலாந்தின் ரிச்சர் ஹாட்லீ மஞ்சுரேகரை வீழ்த்தி தனது 400 ஆவது விக்கெட்டை எடுத்தார். கிரிக்கெட் சரித்திரத்திலேயே 400 விக்கெட் வீழ்த்திய சாதனையாளர் என்ற பெருமையை ஹாட்லி நிகழ்த்தினார்.

நேப்பியரில் நடந்த இரண்டாவது போட்டி முதல் இரண்டு நாட்கள் மழை காரணமாக நடைபெறவில்லை. டபிள்யூ.வி.ராமன் முதல் பந்திலேயே ஆட்டம் இழக்க, அடுத்து ஆட வந்த பிரபாகர் (95), மஞ்சுரேகர் (42), அசாருதீன் (33) ஆகியோர் நிதானமாக ஆடி நிலைமையைச் சமாளித்தனர்.

ஒருவிதத்தில் சச்சின் அவுட் ஆனது எங்கள் அணிக்கு நல்லதுதான். அதே சமயம் சச்சின் ஆட்டத்தை நான் ரசித்துக்கொண்டிருந்தேன் என்பதுதான் உண்மை. செஞ்சுரி அடிக்க எல்லாத் தகுதிகளையும் கொண்ட திறமையான இளைஞன் அவன். ஆனால், மிக எளிதான அந்தக் காட்ச்சை நான் பிடிக்காமல் இருந்திருந்தால் எனது அணிக்கு நான் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறியிருப்பேன்!

கே. ரமேஷ்

(தொடரும்)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 102

ராகுலன் பாலா




சக்தி வேல்




துஷி துஷி




கீர்த்து கரன்




லாவண்யா துரைரத்தினம்



பொஜன் ராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள் அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயவர்த்தனவின் இறுதி டெஸ்ட் தொடர்

# ஹேரத்தின் 6/48 உதவியுடன் மழையை தோற்கடித்து இலங்கை அணி பாகிஸ்தானை வெற்றி கொண்டது



ராங்கன ஹேரத்தின் 6/48 என்ற பந்துவீச்சு பெறுதியின் உதவியினால் இலங்கை அணி மழை, போதிய வெளிச்சமின்மையை தோற்கடித்து 7 விக்கெட்டுக்களினால் பாகிஸ்தான் அணியை வெற்றி கொண்டது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது.

இத் தொடரின் முதல் டெஸ்ட் கடந்த 6-ம் திகதி காலி சர்வதேச விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தமது முதல் இன்னிங்சுக்காக யுனிஸ் கானின அபாரமான 177 ஓட்டங்களின் உதவியுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 451 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, சங்கக்காரவின் சாதனை மிகு இரட்டைச் சதத்தின் உதவியுடன் 9 விக்கெட்டுக்களை இழந்து 533 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

தொடர்ந்து தமது 2-வது இன்னிங்ஸை 82 ஓட்டங்கள் பின்னிலையில் ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் 4-ம் நாள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 4 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய 5-ம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஹேரத்தின் மாயாஜால சுழல்பந்தில் சிக்கி 80.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பில் சப்ராஸ் அஹமட் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களை எடுத்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில ரங்கன ஹேரத் 48 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

21 ஓவர்களில் 99 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் மழை, போதிய வெளிச்சமின்மை தாக்கத்தை செலுத்த முற்பட்ட போதும அதனை முறியடித்த இலங்கை அணி போட்டி நிறைவடைய 4.4 ஓவர்கள் எஞ்சியிருக்க வெற்றியிலக்கை (99) 7 விக்கெட்டுக்களால் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் மஹேல ஜெயவர்த்தன 26, அஞ்சலோ மத்யூஸ் 25 ஓட்டங்களை எடுத்தனர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக இலங்கை அணியின் ரங்கன ஹேரத் தெரிவானார். 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

## ஆணைக்குழு...

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் மன்னார் மாவட்டத்திற்கான விசாரணைகள் நேற்று மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, ஆணைக்குழுவின் முன் தோன்றி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள இந்த ஆணைக்குழுவின் மீது நம்பிக்கை இல்லையென்ற போதிலும், காணாமல்போனவர்கள் தொடர்பிலான விடயங்கள் பற்றிய தமது ஆதங்கத்தைத் தெரிவிப்பதற்காக சாட்சியம் வழங்குவதாகக் கூறியுள்ளார்.

காணாமல்போனவர்கள் பற்றிய விடயங்கள் மட்டுமல்லாமல், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்கு அடிப்படையாக கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனக் குற்றம் சாட்டினார்.

யுத்தத்திற்குப் பின்னர் நாட்டில் நல்லிணக்கம், அமைதி ஏற்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அநேகமான சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அரசாங்கம் கூறி வருவதை அவர் இந்த ஆணைக் குழுவின் முன்னால் மறுத்துரைத்தார்.

யுத்தத்திற்குப் பின்னரான நிலைமைகளில் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து அரசாங்கம் தன்னிடம் கேட்டிருந்தபோது, அது தொடர்பில் 14 விடயங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்து, அதுபற்றி அரச உயர் மட்டத்தில் மூன்று கூட்டங்கள் நடைபெற்று, அவைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஆயர் சுட்டிக்காட்டினார்.

பலவிதமாகக் காணாமல் போயிருப்பவர்கள். உழைப்பாளிகளின்றி தனிமையில் வாடுகின்ற காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள், உரிய விசாரணைகளின்றி நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள், வவுனியா சிறைச்சாலையில் கலகம் மூண்டதாகக் கூறி தமிழ் கைதிகள் மீது தாக்குதல் நடத்தி இரு தமிழ் கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் உள்ளிட்ட சிறைக்கைதிகள் மீதான தாக்குதல்கள், மதங்களுக்கிடையில் குரோதங்களை உருவாக்கும் நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்படாமை உள்ளிட்ட 14 விடயங்கள் குறித்து உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் மன்னார் ஆயர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையிலான தமது சாட்சியத்தின்போது வலியுறுத்தினார்.

அவருடைய சாட்சியம் குறித்து பதிலளித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, இந்த ஆணைக்குழுவிற்கு குறித்தொதுக்கப்பட்ட கடமைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி ஆணைக்குழு செயற்பட்டு வருவதாகவும், அதேநேரம் ஆயரின் சாட்சியத்தில் குறிப்பிடப்பட்ட தமது கடமை எல்லைக்கு அப்பாற்பட்ட விடயங்கள் குறித்து ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாகவும் கூறினார்.

வெள்ளிக்கிழமை முதல் நான்கு தினாங்களுக்கு நடைபெறுகின்ற மன்னார் மாவட்டத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் இன்று திங்கட்கிழமை இறுதிநாளன்று மடு பிரதேச செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## மகிந்த...

எடுக்கவில்லை என்றார் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் கூட்டமைப்பினரே இழுத்தடிக்கின்றனர், தனது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு, அதனை தனது பலவீனம் என்று எவரும் கருதினால், பாரதூரமான விளைவுகள் ஏற்படும என்று ஜனாதிபதி அண்மையில் ஊடகவியலாளர்களை சந்தித்தபோது தெரிவித்த கருத்துக்கள், அரச சார்பு ஊடகம் ஒன்றில் வெளியாயின.

இதையடுத்தே சம்பந்தர் இக்கருத்துக்களை தெரிவித்தார்.

அரசு இதயசுத்தியுடன் பேச்சு வார்த்தைகளை நடத்த முன்வந்து, நாட்டுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாமல், ஒன்றுபட்ட இலங்கைக்குள், நியாயமான, நிரந்தரமான, நடைமுறைபடுத்தக் கூடியத் தீர்வுகளை அது முன்வைத்தால் தமது தரப்பு அதை ஏற்றுக் கொள்ளும் எனவும் சம்பந்தர் கூறுகிறார்.

நாடாளுமன்றத் தேர்வுக்குழுவின் நோக்கம் குறித்து தாங்கள் நன்கு அறிந்துள்ளதாகவும், அது தொடர்பில், அரச தரப்பில் வெளியாகியுள்ள கருத்துக்களும் தங்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## தமிழர்கள்...

திர பிரஜைகளாகவே வாழப் பிறந்தவர்கள் என்ற நியாயங்களையும் வரலாறு எமக்கு விரைவாக பெற்றுத்தந்து கொண்டிருக்கின்றது.

இது எங்கள் நாடு, எங்கள் தாயகம், எங்கள் வரலாற்று வாழ்விடம். இதை யாரும் மறுக்கப் போவதில்லை. எமது வரலாற்று வாழ்விடங்களில் ஒன்றான யாழ்.நகரை அழகுபடுத்தும் நோக்கிலும். எமது வரலாற்றுப் பாரம்பரியங்களின் அடையாள சின்னங்களை எமது மண்ணில் நிறுவ வேண்டும் என்ற எமது இலட்சிய நோக்கிலுமே இன்று இந்த முச்சிலைகளின் திறப்பு விழா நடந்திருக்கின்றது. உரும்பிராயில் பொன் சிவகுமாரனுக்கு நாம் சிலை எடுத்திருக்கின்றோம். யாழ்.முத்திரைச்சந்தியில் இருந்த சங்கிலியன் சிலையை புதுப்பொலிவோடு நாம் புதுப்பித்து தந்திருக்கின்றோம்.

தமிழ் காத்த தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாருக்கு அண்மையில் சிலை எடுக்க உதவியிருக்கின்றோம். அந்த வரிசையில், அன்று தமிழ் பேசும் மக்களை ஆட்சி புரிந்த மன்னர்களான எல்லாளன், பண்டாரவன்னியன் மற்றும் பரராஜசேகரன் போன்றவர்களுக்கு நாம், இன்று சிலையெடுத்திருக்கின்றோம்.

நாம் இலங்கையர்கள் என்ற அடையாளத்தை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். அதேவேளை நாம் தமிழர்கள் என்ற இனத்துவ அடையாளத்தையும் விட்டுக் கொடுத்து விட முடியாது.

நாம் தமிழர்கள் என்பதற்காக இலங்கையர்கள் என்ற அடையாளத்தையோ, அல்லது, இலங்கையர்கள் என்பதற்காக நாம் தமிழர்கள் என்ற அடையாளத்தையோ ஒரு போதும் இழந்து விடப்போவதில்லை.

எமது இனத்துவ அடையாளங்களில் பிரதானமானது நாம் பேசுகின்ற எமது தாய் மொழியான தமிழ மொழியே ஆகும். அந்தவகையில் தமிழ் வளர்த்த தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாருக்கு சிலை எடுத்தது போல்,

இன்னும் தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கு எமது மண்ணில் சிலை எடுக்க எண்ணியுள்ளோம். அது போல், சமூகப்பெரியார்கள், ஆன்மிகத்தலைவர்கள், அரசியல் வரலாற்று தலைவர்கள் ஆகியோருக்கும் நாம் சிலை எடுக்க எண்ணியுள்ளோம்.

எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் எமது மக்களுக்கே சொந்தம் என்பதை அடுத்து வரும் எமது சந்ததிகளுக்கும் எடுத்து சொல்வதற்காக, இன்னும் யார் யாருக்கு சிலை எடுக்க வேண்டுமோ அவர்களுக்கும் நாம் சிலைகளை எழுப்ப தீர்மானித்திருக்கிறோம்.

எமது வரலாற்று வாழ்விடங்கள் எமக்கே சொந்தம் என்ற உரிமையை அடையாளப்படுத்தவே நாம் இந்த எமது மண்ணில் இது போன்ற சிலைகளை நிறுவி வருகின்றோம் என்றார். (எ-6,4)

## பச்சிளம்...

பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ராஜ கிராமம் (கரவெட்டி) பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மனைவியுடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து, மதுபோதையிலிருந்த அக் குழந்தையின் தந்தை பச்சிளங்குழந்தையை தூக்கி நிலத்தில் அடித்துள்ளார்

இதேவேளை மனைவியையும் கடுமையாக குறித்த நபர் தாக்கியுள்ளார். இதில் படுகாயமடைந்த தாயும் அவரது ஒன்பது மாதம் ஆண் குழந்தையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ள அதே வேளை யாழ்.சிறுவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (எ-6,60)

## தீ விபத்தால் கடை எரிந்து நாசம்

(முல்லைத்தீவு)

மல்லாவி நகர்ப் பகுதியில் அழகுப் பொருள் விற்பனை நிலையம் தீப்பற்றி எரிந்ததில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் நாசமாகியுள்ளன. நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது. கடை பூட்டப்பட்டிருந்த நிலையில் முற்பகல் 10 மணியளவில் தீ பரவியுள்ளது. தீயை அணைக்க பொது மக்கள் எடுத்த முயற்சிகை கூடாத நிலையில் கடை முற்றாக எரிந்துள்ளது.

மின்னொழுக்கே தீ பரவக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6,15)

## நிதியளி...

பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலிலேயே இவர்கள் மூவரும் தீவிரவாத செயற்பாடுகளுக்கு நிதியளிப்போர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் துரைரத்தினம் பிரான்ஸிலும், கைலாயநாதன் இந்தியாவிலும், தனுஸ்கோடி பிறேமினி இலங்கையிலும் வசிக்கின்றனர்.

தீவிரவாத செயற்பாடுகளுக்கு நிதியளிப்போர் பட்டியலில் இடம் பெற்றிருப்போர் தமது பெயர்களை நீக்கக் கோரி தகுதி வாய்ந்த அதிகாரிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும், அதுகுறித்து ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படும் எனவும் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதனடிப்படையிலேயே இந்த மூவரினதும் பெயர்களும் தீவிரவாத செயற்பாடுகளுக்கு நிதியளிப்போர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## மோட்டார்...

விக்கையில்,

வீடொன்றின் மலசலகூடக் குழியினை, வீட்டு உரிமையாளர் நேற்று துப்புரவு செய்தவேளையில் குண்டுகள் இருப்பது கண்டு, அது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து, இராணுவத்தினருடன் அங்கு சென்று, மேற்படி 4 குண்டுகளையும் மீட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-6)

## ஈழத்தமிழ்...

ராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீட பேராசிரியர் தி.வேல்நம்பி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதியும் வரலாற்றுத்துறை பேராசிரியருமான எஸ்.சத்தியசீலனின் வரலாற்று உரையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈழத்தின் முக்கிய சிற்பக்கலைஞர்களுள் ஒருவரும் இச் சிலைகளின் ஆசாரியுமான முன்னாள் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் கலாபூசணம் செல்லையா சிவப்பிரகாசத்திற்கு கௌரவிப்பும் வழங்கப்பட்டது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7வது தடவையாக மீண்டும் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும்

## வெளிநாட்டு ஹொட்டேல் பயிற்சிநெறி (Diploma in Hotel Management)

அறிமுகக் கருத்தரங்கும் அனுமதிகளும்

கற்கைநெறிக் காலத்தில் 75,000/- வரையில் வருமானமீட்டலாம்

கற்கைநெறி நிறைவில் விரும்பிய நாட்டில் அதிக சம்பளத்துடன் வேலைவாய்ப்பு ஏற்பாடு

SEGi UNIVERSITY

**3 வருட விசாவுடன் மாதங்களுக்குள் பயணம்**

செப்டெம்பரில் 6ஆவது அணி பயணமாகிறது.



வெளிநாட்டுப் பிரதிநிதியை நேரில் சந்தித்து 7வது அணியில் இணைந்துகொள்ள வாருங்கள்!

கல்வித் தகைமை: க.பொ.த. (சா/த) வயதெல்லை: 30

15ம் திகதி வெள்ளி பி.ப. 2 மணி
**யாழ் சிகரம் விரிவுரை மண்டபம்**
16ம் திகதி சனி காலை 10மணி
**வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல்**
18ம் திகதி வெள்ளி மு.ப. 10மணி
**யாழ் சிகரம் விரிவுரை மண்டபம்**

**சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி நிறுவனம்**
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Tel: 021 222 0011 www.sikaram.lk fb: Edu Sikaram
முற்பதிவுக்கு : 077 36 16 798
(C-8165) பிரவேசம் முற்றிலும் இலவசம்


# பிரபாகரன் போன்ற...

பாரிய இரு தவறுகள் என இந்திய முன்னாள் புலனாய்வு அதிகாரி கேணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

இந்த இரு தவறுகள் காரணமாக ராஜபக்ஷ அரசாங்கம் குறித்து மக்கள் மத்தியில்சந்தேகத்தை உருவாக்கி யுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மகிழ்சியற்ற சூழல நிலவுகின்ற போதிலும் தமிழர்கள் தமிழீழம் சாத்தியமானது என கருதுவார்களா என்பது சந்தேகமே. சர்வதேச புலிகள் மத்தியில் புத்துயிர் அளிக்க கூடிய பிரபாகரன் போன்ற தலைவர் எவரும்இல்லைஎனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார், யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுடைய துயரங்களை தீர்க்கும் விடயத்தில் அரசாங்கம் போதியளவிற்கு உணர்வுபூர்வமாக நடந்து கொள்ளவில்லை. அரசாங்கம் தன் மீது அந்த மக்களுக்கு நம்பக்கையையும்,பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்த தவறிவிட்டது.

ஐந்து வருடங்களுக்கு பின்னரும நல்லிணக்கம் உருவாவதற்கு இடமளிக்கப்படவில்லை, ஆகவே மக்கள் மகிழ்ச்சியாக யில்லை இதனை பயன்படுத்தி இலங்கையில் மறுபடி விடுதலைப்புலிகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கு எஞ்சியிருக்கின்ற உறுப்பினர்கள் முயலாம்.

மகிழ்சியற்ற சூழல் நிலவுகின்ற போதிலும் தமிழர்கள் தமிழீழம்சாத்தியமானது என கருதுவார்களா என்பது சந்தேகமே. (எ-6)


**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
**af பிரெஞ்சு மொழி** af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. (7244)
பிரான்ஸ் செல்வோர் விரையுங்கள்...உடன் அழையுங்கள்...
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**வேலையாட்கள் தேவை**
129C, KKS வீதி,யாழ்ப்பாணத்திலுள்ளவசந்தவன் டயர் கடைக்கு வேலையாட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் நேரில் வரவும். (7267)
தொடர்புகளுக்கு :- 021 222 1082


## நல்லைக்குமரன் மலர் வெளியீடு

யாழ்.மாநகராட்சி மன்றின் சைவ சமய விவகாரக் குழுவின் நல்லைக்குமரன்மலர் வெளியீட்டுவிழா 2014 (22) இன்று திங்கட்கிழமைகாலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சைவ சமய விவகாரக் குழுவின்தலைவரும், மாநகர ஆணையாளருமான செ.பிரணவநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில்யாழ் விருதும்பொற்கிழியும் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றிய தலைவரும், சித்தன்கேணி சிவன் கோவிலின் பிரதமகுருவுமாணவித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்களுக்கு வழங்கப் படவுள்ளது. (எ)


**Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-8164)

**SYLO ஐஸ் கிறீம்** SWEET YOUR LIFE ORBIT



உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல.251C பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.

தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள் ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்
021 492 6003

இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்

SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd
இல.76, அம்மன் கோவில் வீதி
கொக்குவில், கிழக்கு
7207

# செய்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்



சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவரும் சித்தன்கேணி சிவன் தேவஸ்தான குருவும்
எமது ஆலய மகோற்சவங்களில் கலந்து சிறப்பிப்பவருமாகிய வணக்கத்திற்குரிய
வித்யாசாகரம் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் அவர்களுக்கு
சமய சமூக சேவைக்காக யாழ்ப்பாணம் மாநகர சபையால்
'யாழ் விருது - 2014'
என்னும் கௌரவ விருது இன்று (11.08.2014) திங்கட்கிழமை யாழ்ப்பாணம்
நாவலர் கலாசார மண்டபத்தில் வழங்குவதையிட்டு அவருடைய பணியும் சேவையும்
மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல சிரம்பான் ராசாஜெயா ஸ்ரீ மஹாமாரி அம்பாளை வேண்டி
எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுபம்



பிரதம குருக்கள் - நிர்வாக சபையினர்
சிரம்பான் ராசாஜெயா வாழ் மஹாமாரி அம்பிகை அடியார்கள்
ஸ்ரீ மஹாமாரி அம்மன் ஆலயம்
தமான் ராசாஜெயா - சிரம்பான், மலேசியா.
(C-8168)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.